பக்கங்கள்:-32

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | தை 29 | வியாழக்கிழமை | 26.02.2026 | அதிர்வு 210

## “பழசும் வேண்டாம் புதுசும் வேண்டாம்”

### யாழில் சனியன்று போராட்டம்



(விரிவான செய்தி 12 ஆம் பக்கம்)

# சுரேஷ் சலேயின் கைது: சஜித் அணி வரவேற்பு!

## நிலக்கரி ஊழலைத் திசைதிருப்பும் முயற்சியா என்றும் பலத்த சந்தேகம்



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே கைது செய்யப்பட்டமையை ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவேற்றுள்ளனர்.

இருப்பினும், இந்தத் திடீர் கைது நடவடிக்கையானது தற்போது நாட்டில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலக்கரி ஊழல் விவகாரத்தை மக்கள் மத்தியிலிருந்து திசைதிருப்புவதற்காக அரசால் முன்னெடுக்கப்பட்ட ஒரு தந்திரோபாய முயற்சியோ என்ற பலத்த சந்தேகத்தையும் அவர்கள் வெளியிட்டுள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்திற்கு முன்பாக நேற்று புதன்கிழமை ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த

06

# புலிகளை அழித்தவரை அரசு வேட்டையாடுவதா?

## சுரேஷ் சலே கைதுக்கு உதய கம்மன்பில கடும் எதிர்ப்பு; இது திட்டமிட்டபழிவாங்கல் நடவடிக்கை என்றும் ஆவேசம்

**அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஓய்வுபெற்றமேஜர்ஜெனரல்சுரேஷ்சலே கைது செய்யப்பட்டமையானது அரசின் திட்டமிட்ட பழிவாங்கல் நடவடிக்கை என்று முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில குற்றம் சாட்டினார்.**

**இது குறித்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியதாவது:-**

13






அவர் யாழ்ப்பாணத்து அரசியல்வாதி. அவரது முகப்புத்தகத்தை நேற்று இரவு பார்க்க நேர்ந்தது. ‘திருப்பதி ஏழுமலை வெங்கடேசா...!’ என்ற சினிமா பாடலின் இரண்டு வரிகள் இருந்தன. போதாக்குறைக்கு நாமம் போட்ட ஒரு சித்திரமும் இருந்தது. அதைப் பார்த்ததும் அதில் ஏதோ ஒரு விடயம் பொதிந்திருப்பதாக எனக்கு தோன்றியது. அவரிடம் அது பற்றிக் கேட்பதில்லை என்று தீர்மானித்துக் கொண்டு, என் சுய தேடல்களை முடுக்கிவிட்டேன்.

நான் சந்தேகப்பட்டது சரியாகத்தான் இருந்தது. அவரோடு வில்லன் நிலையில் இருக்கும் அவரது கட்சி அரசியல்வாதி இந்தியாவில் என்பது எனக்குத் தெரியும். அவர் நேற்றிரவு சென்னையில் இருந்து திருப்பதிக்கு பயணமாகிக் கொண்டிருந்தார் என்பதை உறுதிப்படுத்தினேன். அதுதான் அந்த முகப்புத்தகப் பதிவின் உள்ளார்ந்தம் என்பதையும் புரிந்து கொண்டேன்.

சரி. அந்த முகப்புத்தகத்தில் அந்தப் பாடலின் முதல் இரண்டு அடிகள் பதிவாகி இருந்தன. 06





# அமைச்சர், பிரதி அமைச்சருக்கு மர்மநபர்களால் கொலை மிரட்டல்!

## சி.ஐ.டி. தீவிர விசாரணை

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால மற்றும் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல ஆகியோருக்கு எதிராக மர்மநபர்களால் விடுக்கப்பட்டதாகக் கூறப்படும் கொலை மிரட்டல்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

பொலிஸ் ஊடகப் பிரிவில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போது, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எவ்.யு. வூட்லர் இத்தகவலை உத்தியோகபூர்வமாக வெளியிட்டார்.

அவிசாவளை பொலிஸ் பிரிவுக்குக் கிடைத்த இரகசிய புலனாய்வுத் தகவலொன்றின் அடிப்படையிலேயே இந்தத் தீவிர விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சரின் பாதுகாப்பு குறித்துக் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், இந்த மிரட்டலின் பின்னணியில் உள்ள நபர்களைக் கண்டறியப் பல குழுக்கள் நியமிக்கப்பட்டுத் தேடுதல் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

குறித்த மிரட்டல் விடுக்கப்பட்ட விதம் மற்றும் அதன் நோக்கம் குறித்துப் பொலிஸார் தற்போது மேலதிக சாட்சியங்களைத் திரட்டி வருகின்றனர்.

# பெண்ணின் சங்கிலியை அறுத்த இராணுவச் சிப்பாய் மடக்கிப் பிடிப்பு

## சுன்னாகத்தில் பரபரப்பு

(ந.லோகதயாளன்)

யாழ். சுன்னாகம் நகர் பகுதியில் வீதியால் நடந்து சென்ற பெண்ணின் தங்கச் சங்கிலியைக் கொள்ளையிட்ட இராணுவச் சிப்பாய் ஒருவர் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது:-

சுன்னாகம் நகர்ப் பகுதியில் பெண் ஒருவர் வீதியால் நடந்து சென்று கொண்டிருந்தபோது, அங்கு வந்த நபர் ஒருவர் திடீரென அப்பெண்ணின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பியோட முயன்றுள்ளார். இதன் போது, அப்பெண்ணின் சத்தத்தைக் கேட்டு திரண்ட பொதுமக்கள், கொள்ளையனைத் துரத்திச் சென்று மடக்கிப் பிடித்தனர்.

பிடிபட்ட நபரைச் சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைத்த நிலையில், அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அவர் இராணுவச் சிப்பாய் என்பது கண்டறியப்பட்டது.

கைது செய்யப்பட்ட நபர் வலிகாமம் வடக்கு, மயிலிட்டிப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமில் கடமையாற்றுபவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.








# ஆவணங்கள் இல்லை எனக் காரணம் காட்டி மக்களின் காணிகளை முடக்கவே முடியாது!

## அவற்றை முழுமையாக விடுவிக்க வேண்டும் என்று வனவளத் திணைக்களத்திடம் ஆளுநர் வலியுறுத்து

மக்களின் பூர்வீக வாழ்விடங்கள் மற்றும் வாழ்வாதார நிலங்களுக்கு முறையான ஆவணங்கள் இல்லை என்பதைக் காரணம் காட்டி, அக்காணிகளை விடுவிக்க வனவளத் திணைக்களம் மறுப்புத் தெரிவிப்பதை எவ்விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

மாவட்ட செயலகங்களினால் பரிந்துரைக்கப்படும் மக்கள் காணிகளை வனவளத் திணைக்களம் எவ்விதத் தடையுமின்றி முழுமையாக விடுவிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் இவ்வாண்டுக்கான முதலாவது காலாண்டு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், குழுவின் தலைவரும் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சருமான இ.சந்திரசேகர் மற்றும் குழுவின் இணைத் தலைவரும் வடக்கு மாகாண ஆளுநருமான நா.வேதநாயகன் ஆகியோரின் இணைத் தலைமையில் நேற்று புதன்கிழமை காலை கிளிநொச்சி மாவட்ட செயலகத் திறன் அபிவிருத்தி மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்தின்ஆரம்பத்தில்வரவேற்புரையாற்றிய கிளிநொச்சி மாவட்ட செயலாளர் சு.முரளிதரன், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் மணல் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள துரித நடவடிக்கைகள் குறித்து விரிவாக விளக்கமளித்தார். கல்மடுக் குளத்திலிருந்து பெறப்பட்டுச் சுத்திகரிக்கப்பட்ட மணல், தற்போது கரைச்சிப் பிரதேச சபையின் ஊடாக மக்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக விநியோகிக்கப்பட்டு வருகின்றது. மேலும், கடந்த “டித்வா” பேரிடரின் பின்னர் இரணைமடுக் குளத்தின் மேலதிக நீர் வெளியேறிய ஆற்றுப்

தொடர்ச்சி▼







# ஆவணங்கள் இல்லை எனக் காரணம் காட்டி மக்களின் காணிகளை முடக்கவே முடியாது!

## அவற்றை முழுமையாக விடுவிக்க வேண்டும் என்று வனவளத் திணைக்களத்திடம் ஆளுநர் வலியுறுத்து

தொடர்ச்சி▲

பகுதிகள், அக்கராயன் மற்றும் கல்லாறு ஆகிய ஆற்றுப் பகுதிகளில் குவிந்துள்ள மணலை பிரதேச சபைகள் ஊடாகச் சேகரித்து மக்களுக்கு விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர, கிளிநொச்சியிலுள்ள 5 குளங்களில் மண்ணைக் கழுவுவதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளதாகவும், இதன்மூலம் சுமார் 15,000 கியூப் மணல் பெற்றுக்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். இதனூடாக இரு மாவட்டங்களினதும் எதிர்கால மணல் தேவையை ஓரளவு பூர்த்தி செய்ய முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்போது உரையாற்றிய அமைச்சர் இ.சந்திரசேகர், நடப்பு ஆண்டில் மாவட்டத்தின் அபிவிருத்திக்காகப் பல்வேறு நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறவுள்ள நிலையில், அவற்றை வினைத்திறனுடன் செலவிடுவதற்கான போதிய கால அவகாசம் காணப்படுவதால், அபிவிருத்திப் பணிகளை மிகச் சிறப்பாகவும் துரிதமாகவும் முன்னெடுக்குமாறு அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதிக்கான பல்வேறு விடயங்கள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டன. பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி, மீள்குடியேற்ற அமைச்சின் ஊடான வீட்டுத் திட்டங்கள், கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டங்கள், புனரமைக்கப்பட வேண்டிய பாலங்களின் முன்னுரிமைப் பட்டியல், இடர் முகாமைத்துவத் திட்டம் மற்றும் சமூக சக்தி வறுமை ஒழிப்புத் திட்டம் ஆகியவற்றுக்கான அனுமதிகள் கோரப்பட்டபோது, கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா, பொ.கஜேந்திரகுமார் மற்றும் பிரதேச சபைகளின் தவிசாளர்கள் ஆகியோர் தமது எதிர்ப்பைப் பதிவு செய்தனர். அதேவேளை, வன்னேரிக்குளம் சுற்றுலா அபிவிருத்தி, கௌதாரிமுனையில் காணி வழங்கல் மற்றும் பொருளாதார மத்திய நிலையக் கடைகள் வழங்கல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்களுக்குக் குழுவினால் அனுமதி வழங்கி வைக்கப்பட்டது.

வனவளத் திணைக்களத்திடமிருந்து 10 ஆயிரத்து 821 ஏக்கர் காணியை விடுவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும், வெறுமனே 1,088 ஏக்கர் காணியை மாத்திரமே விடுவிக்க வனவளத் திணைக்களம் பரிந்துரைத்துள்ளது.

இது தொடர்பில் சுட்டிக்காட்டிய மாவட்ட செயலாளர், கோரப்பட்ட முழுமையான 10 ஆயிரத்து 821 ஏக்கர் காணியையும் விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தியநிலையில், அக்கோரிக்கைக்குமாவட்ட ஒருங்கிணைப்புக் குழு ஏகமனதாக அனுமதிவழங்கியது. வனவளத்திணைக்களத்தால் விடுவிக்கப்படவுள்ள காணிகள் தொடர்பான முழுமையான விவரங்களை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியைப் பெற்றுச் சமர்ப்பிக்குமாறு அமைச்சரவை அறிவுறுத்தியுள்ளதாகவும் மாவட்ட செயலாளர் இதன்போது குறிப்பிட்டார்.

அதேபோன்று, கிளிநொச்சி மாவட்டத்தின் எதிர்காலக் குடிதண்ணீர் தேவையைக் கருத்தில்கொண்டு, இரணைமடுக் குளத்திலிருந்து குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்கான அனுமதியும் ஒருங்கிணைப்புக் குழுவால் வழங்கப்பட்டது. அத்துடன், கிளிநொச்சி நகர்ப்புறக் குளங்களின் ஒதுக்கீட்டுக் காணிகளை ஆக்கிரமித்துள்ளவர்களைச் சட்டபூர்வமாக வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளுக்கும் அனுமதி அளிக்கப்பட்டது. மேலும்,கரைச்சிப்பிரதேசசெயலர்பிரிவை இரண்டாகப் பிரிப்பதற்கும், சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைப் பிரித்து மீளமைப்பதற்கும் ஒருங்கிணைப்புக் குழு அனுமதி வழங்கியது.

மேலும், கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சட்டவிரோத கடலட்டைப் பண்ணைகளை ஒழுங்குபடுத்துவதற்கான அனுமதியும் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெயசந்திரமூர்த்தி றஜீவன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அர்ச்சுனா இராமநாதன் ஆகியோரும், வடக்கு மாகாணப் பிரதம செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், மாகாணப் பணிப்பாளர்கள், ஆணையாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பிரதேச சபைகளின் கௌரவ தவிசாளர்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.







# நான்கு மாதங்களில் ஒரு லட்சம் பேர் கைது! பெருமளவு போதைப்பொருள்களும் மீட்பு!!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு




இலங்கையில் போதைப்பொருள் ஒழிப்புக்காக முன்னெடுக்கப்பட்டு வரும் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் கீழ், கடந்த நான்கு மாதங்களில் மாத்திரம் ஒரு இலட்சத்து 2 ஆயிரத்து 900 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விரிவான சோதனைகள்

இது குறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எவ்.யு.வூட்லர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த நான்கு மாதங்களாக போதைப்பொருள் ஒழிப்புச் செயற்றிட்டம் மிகவும் ஆக்கபூர்வமான முறையில் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

இக்காலப்பகுதியில் 15 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவர்களில் ஒரு இலட்சத்து 2 ஆயிரத்து 900 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்கள்**

சுற்றிவளைப்புகளின் போது மீட்கப்பட்ட போதைப்பொருள்களின் விவரங்கள் பின்வருமாறு:-

* ஹெரோயின்: 526 கிலோ கிராம்
* ஐஸ்: 1,419 கிலோ கிராம்
* கஞ்சா: 3,548 கிலோ கிராம்

**சட்ட நடவடிக்கையும் சொத்துக் குவிப்பும்**

கைது செய்யப்பட்டவர்களில் 2 ஆயிரத்து 400 பேருக்கு எதிராக நீதிமன்றங்கள் ஊடாகத் தடுப்புக் காவல் உத்தரவு பெறப்பட்டு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அத்துடன், போதைப்பொருள் கடத்தல் மூலம் ஈட்டிய சட்டவிரோத சொத்துக் குவிப்புத் தொடர்பில் 146 விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.



# மிஹிந்தலையில் கோர விபத்து! மரத்தில் மோதி இளைஞர் பலி!!

கோர விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றுமொருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அநுராதபுரம்-மிஹிந்தலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சீப்புக்குளம் - கலன்பிந்துனுவெவ வீதியின் பாளுவெவ பகுதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சீப்புக்குளம் பகுதியிலிருந்து கலன்பிந்துனுவெவ நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள், வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகிலிருந்த மரமொன்றில் மோதியுள்ளது.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவரும், பின்னால் அமர்ந்து பயணித்தவரும் பலத்த காயமடைந்த நிலையில், உடனடியாக தம்மன்னாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். எனினும், அங்கு சிகிச்சை பலனின்றி மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் மிஹிந்தலை, சீப்புக்குளம் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

காயமடைந்த மற்றைய நபருக்கு வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வரும் நிலையில், விபத்து குறித்து மிஹிந்தலை பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அதிவேகப் பயணமே இந்த விபத்துக்குக் காரணமாக இருக்கலாம் என முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முதல் அடியின் விளக்கம் எனக்கு புரிந்தது. அது, திருப்பதி வெங்கடேசப் பெருமாளைத் துதிப்பது. இரண்டாவது அடி எதைச் சொல்ல வருகின்றது என்பது எனக்கு விளங்கவில்லை.

இன்று காலையில் திருப்பதியில் இருக்கும் பிரமுகர் வெங்கடஜலபதியை வணங்கும் போது, அவர் பச்சைக்கொடி காட்ட வேண்டுமென்று 'அந்த தெய்வீகனிடம்'அல்லது'தேவிகனிடம்'என்னகோரப் போகிறார் என்று தெரியவில்லை. தெரிய வந்தால் அப்போது வாசகர்களோடு பகிர்ந்து கொள்வேன்.

* * *

நாட்டின் பிரதம நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேன நாளை வெள்ளிக்கிழமை முதல் வரும் செவ்வாய்க்கிழமை வரை வடக்கு மாகாணத்தில் சுற்றுப்பயணம் செய்ய இருக்கிறார்.

இந்த விஜயத்தின் போது கடல் கடந்து தீவுப் பகுதியில் உள்ள வணக்க ஸ்தலம் ஒன்றுக்கும் அவர் செல்கின்றார் என்று கூறப்படுகின்றது. அது நயினாதீவா அல்லது கச்சதீவா என்பது தெரியவில்லை.

வழக்கமாக வடக்கில் நீதிமன்றக் கட்டடங்களைத் திறந்து வைப்பதற்குத்தான் பிரதம நீதியரசர் பதவியில் இருப்பவர்கள் இந்தப் பக்கம் தலை காட்டுவார்கள். ஆனால் பிரதம நீதியரசர் பத்மன் சூரசேன வடக்கில் நீதிமன்றங்களில் நிலைமை குறித்து கள ஆய்வு செய்து, வடக்கு நீதித்துறையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக வருகிறார்.

இந்த சனி, ஞாயிறு, திங்கட்கிழமைகள் விடுமுறை தினங்களாக இருக்கின்ற போதிலும், வடக்கு மாகாணத்தில் உள்ள பல்வேறு நீதிமன்றங்களுக்கும் அவர் விஜயம் செய்து நிலைமைகளை நேரில் ஆராய்வார் எனத் தெரிகிறது.

இலங்கையின் நீதித்துறையை 'ஈ – நீதிமன்றங்கள்' (e-courts) அல்லது மின் நீதிமன்றங்களாக மாற்றும் நடவடிக்கைகள் தெற்கில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தகவல் மற்றும் தொடர்புத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி, வழக்குத் தாக்கல் முதல் தீர்ப்பு வரை அனைத்தையும் கணினி மயப்படுத்தப்பட்ட – காகிதம் இல்லா முறையில் – நடத்தும் நவீன நீதிக் கட்டமைப்பு இதுவாகும். இது, வழக்குத் தாமதத்தைக் குறைத்து வெளிப்படைத்தன்மையுடன் எளிதாகவும் வேகமாகவும் நீதியை பெறுவதை நோக்கமாக கொண்டது.

இந்த முறைமையை ஏற்படுத்துவதில் அதிக சிரத்தை கொண்ட பிரதம நீதியரசர் , அதனை வடக்கு மாகாணத்திலும் ஒரே சமயத்தில் நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை கவனித்து வருகிறார். அதன் ஒரு கட்டமாக இந்த விஜயம் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

* * *

'ஓடுமீன் ஓடி உறுமீன் வரும் வரையும் காத்திருக்குமாம் கொக்கு' என்பார்கள். அது போலத்தான் ஆட்சிக்கு வந்ததும் ஈஸ்டர் ஞாயிறுக் குண்டுத் தாக்குதல் தொடர்பில் புதிய கண்ணோட்டத்துடனான விசாரணைகளை முழு அளவில் ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, கடந்த ஒன்றரை வருடங்களாகக் காத்துத்தான் இருந்தார். இப்போது தான் கனகச்சிதமாகக் கைது நடைபெற்றிருக்கின்றது.

காத்திருந்து மடக்கப்பட்டிருப்பதால், முழு ஆயத்தங்களும், கையாளுவதற்கான தந்திரோபாயங்களும் முழு அளவில் பின்பற்றப்பட்டிருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

எனினும் அரச புலனாய்வுத் துறையின் பணிப்பாளராக இருந்த மேஜர் ஜெனரல் சுரேஷ் சலேயின் கைது அரசாங்க தரப்பில் பலருக்கும் ஆச்சரியத்தையும் அதிருப்தியையும் தராமல் இருக்கவில்லை.

ஜே.வி.பி. தலைமையகம் அமைந்துள்ள கொழும்பு பலவத்தையில் இருந்து நேற்று எதிரணியின் முக்கிய பிரமுகர்கள் சிலருக்கு தொலைபேசி அழைப்புகள் பறந்தன.

"இந்தக் கைது எங்கள் பக்கத்தில் இணக்கத்துடன் முன்னெடுக்கப்படவில்லை. எங்கள் கட்சியும் இதனை அங்கீகரிக்கவில்லை. இத்தகைய விடயங்களைக் கையாளும் இலங்கைக் குற்றப் புலனாய்வுத் துறையின் பணிப்பாளரான ஷானி அபயசேகர தமது மட்டத்தில் இந்தக் கைது முடிவை எடுத்திருக்கிறார். அரசு தரப்பில் இருக்கும் நாங்கள் இதற்கு எதிராகப் பகிரங்கமாகக் குரல் எழுப்ப முடியாது. ஆகவே இதற்கு எதிராக நீங்கள் குரல் எழுப்புங்கள்" என்று ஜே.வி.பியின் கொழும்புபலவத்தையில்இருந்துகிடைத்த தொலைபேசி அழைப்புகள் எதிரணி தலைவர்களை உசுப்பி விட்டன.

ஆயினும் அந்தக் கூற்று – அந்த பலவத்தையில் இருந்து வந்த தகவல் – உண்மையல்ல என்பதுதான் உறுதியானது. ஏனெனில் மேஜர் ஜெனரல் சுரேஷ் சலேயைத் தடுத்து வைத்திருப்பதற்கான தடுப்புக் காவல் உத்தரவு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்தான் வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் அனுமதியின்றி இது நடைபெற்றிருக்க முடியாது.

ஆகவே, ஜனாதிபதி மட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுதான் இது. ஆயினும், அது குறித்து பலவத்த தரப்பினருக்கு ஜனாதிபதி தரப்பு தகவல் எதையும் முன்கூட்டியே தெரிவிக்கவில்லை என்பதுதான் இதன் மூலம் புலனாகுகின்றது.

கைது செய்யப்பட்டுள்ள சுரேஷ் சலேயின் மின்னஞ்சல்கள், வங்கிக் கணக்குகள், தொலைபேசி உரையாடல்களின் அழைப்பு இலக்கங்கள் போன்றவை பற்றியெல்லாம் துருவித் துருவி ஆராயப்படுவதாகக் கூறப்படுகின்றது.

ஆனால் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பின்னர் அரச புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக கடமையாற்றியவர் சுரேஷ் சலே அந்தப் பதவியில் இருந்து கொண்டு, தமக்கு எதிராக வரக்கூடிய சாட்சியங்கள், ஆவணங்கள், சான்றுகள், ஆதாரங்களை அங்கு விட்டு வைத்து அவர் வெளியேறி இருப்பார் என்று எண்ணுவது முட்டாள்தனம்.

அவற்றையெல்லாம் தாண்டி, காத்திரமான ஆதாரங்களைக் கையில் எடுத்த பின்னர்தான், ஷானி அபேசேகரா குழு கைது நடவடிக்கை வரை முன்நகர்ந்து இருக்கும் என்று விடயம் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆனால், இந்தக் கைதினால் தென்னிலங்கைக்கு சில ஆபத்துக்கள் உண்டு.

யுத்த காலத்தில் இடம்பெற்ற பல மோசமான சம்பவங்களின் பின்னணியில் சுரேஷ் சலேயும் இருந்தார் என்று கருதப்படுகின்றது. அப்படி இல்லாவிட்டாலும் அவ்வாறு இடம் பெற்ற பல்வேறு சம்பவங்கள் பற்றிய விடயங்கள், விவரங்கள் அவருக்கு நன்கு தெரியும் என்று கூறப்படுகின்றது.

அத்தகையவரைக் கைது செய்து, குற்றவாளியாக்கும்நடவடிக்கை அளவுக்கு சீண்டுவது, பல உள்வீட்டு விவகாரங்களைப் பகிரங்கத்திற்குக் கொண்டு வரும் ஆபத்தைத் தரக்கூடியது.

கிருஷாந்தி குமாரசுவாமி பாலியல் வல்லுறவு மற்றும் படுகொலை வழக்கில் சாதாரண சிப்பாயான சோமவன்ஸ ராஜபக்ஷவை கைது செய்து, அவரைச் சீண்டப் போக... அவர் செம்மணியில் 400 பேர் வரைப் புதைக்கப்பட்ட விடயங்களை அம்பலப்படுத்தும் நிலைமை ஏற்பட்டதை யாரும் மறந்து விட முடியாது.

யுத்த காலத்தில் சர்ச்சைக்குரியவரான பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு, எல்லா விடயங்களிலும் வலது கரமாகச் செயல்பட்ட மேஜர் ஜெனரல் சுரேஷ் சலையைக் கைது செய்து சீண்டுவது பல இருண்ட கால இரகசியங்களை பகிரங்கத்திற்கு கொண்டு வரும் வாய்ப்பைத் தரக் கூடும்.

'யார் குற்றியாவது நெல்லானால் சரி'என்பது போல எந்த வகையிலாவது அந்த இருண்ட கால கொடூரங்கள் அம்பலத்துக்கு வர வாய்ப்பு பிறந்தால் நல்லதுதான்.

சுரேஷ் சலேயின் கைது, ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் சூட்சுமங்களை – சூக்குமங்களை – மட்டுமின்றி, யுத்த காலத்தில இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்ற விடயங்களையும் அம்பலத்துக்கு கொண்டு வர சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருமானால் அது தமிழருக்கு பெரும் வரப் பிரசாதமாகிவிடும். பழம் நழுவி பாலில் விழுந்த கதையாக அது அமையும்.

## சுரேஷ் சலேயின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான் மற்றும் சுஜித் சஞ்சய பெரேரா ஆகியோரே மேற்படி விடயங்களைக் கூறியுள்ளனர்.

**முஜிபுர் ரஹ்மான்**

"உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக சுரேஷ் சலே மீது நீண்டகாலமாகப் பாரதூரமான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வந்தன. எனவே, அவரது கைது வரவேற்கத்தக்கது. எனினும், இந்த விசாரணைகள் முழுமையான வெளிப்படைத்தன்மையுடன் அமைய வேண்டும்.


உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்ற காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பாக இருந்த இராணுவ அதிகாரியே தற்போதைய அரசின் பிரதி பாதுகாப்பு அமைச்சராகப் பதவி வகிக்கின்றார். விசாரணைகள் சுயாதீனமாக நடைபெற வேண்டுமாயின், அவரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு விசாரணைகளை முன்னெடுக்குமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறோம்." – என்றார்.

**சுஜித் சஞ்சய பெரேரா**

"சுரேஷ் சலேயின் கைது நடவடிக்கையை நாம் கொள்கை ரீதியாக வரவேற்கின்றோம். ஆனால், தற்போது பாரிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலக்கரி கொள்வனவு மோசடியை மக்கள் மத்தியிலிருந்து மறைப்பதற்காகவே இந்தத் திடீர் கைது அரங்கேற்றப்பட்டுள்ளதோ என்ற சந்தேகம் எழுகின்றது.

இவ்வாறான கைதுகளின் ஊடாக நிலக்கரி ஊழலை ஒருபோதும் மூடி மறைக்க முடியாது என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும். இது குறித்தும் முறையான விசாரணைகள் அவசியம்." – என்றார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் எவ்வித அரசியல் தலையீடுகளும் இன்றி உண்மை கண்டறியப்பட வேண்டும் என இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேலும் வலியுறுத்தினர்.


GOLDEN VOICE
OF NORTH
குரல் தேர்வு
விரைவில்...!
a one
media network
MURASU
digital
tamil one

## நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# சுரேஷ் சலேயின் கைது!

ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக நாட்டின் புலனாய்வுச் சேவைகளின் பணிப் பாளராகப் பணியாற்றிய மேஜர் ஜெனரல் துவான் சுரேஷ் சலே கடைசியாகக் கைது செய்யப்பட்டு விட்டார். நீண்ட காலமாக எதிர் பாக்கப்பட்ட ஒரு விடயம்தான் இது.

ஏற்கனவே சமூகம் மற்றும் மத மையத்தின் நிர்வாக இயக்குநர் வணக்கத்துக்குரிய தந்தை றொஹான் சில்வா மேற்படி சுரேஷ் சலேயின் பெயரைக் குறிப்பிட்டு குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்த காலத்தில் இருந்தே இந்த கைது பற்றிய எதிர்பார்ப்பு இருந்து வந்தது.

ஆயினும், நாட்டின் புலனாய்வு சேவைகளின் தலைவராக இருந்த ஒருவரைக் கைது செய்யும் துணிச்சல் ஆளுந்தரப்புக்கு இருக்கின்றதா என்ற கேள்வி பல மட்டங்களில் இருந்ததும் மறுக்கக் கூடியது அல்ல.

இந்த ஈஸ்டர் ஞாயிறு தாக்கு தலுக்கான பின்னணியில் மேஜர் ஜெனரல் துவான் சுரேஷ் சலே சம்பந்தப்பட்டிருக்கின்றார் என்று தெரிவித்து 'சனல் - 4' சேவையின் ஆவணப்படத்தில் தகவல்கள் வெளியாகி இருந்தன. அதன் அடிப்படையிலேயே வணக்கத் துக்குரிய தந்தை றொஹான் சில்வா தமது முறைப்பாட்டைச் செய் திருந்தார்.

இந்த முறைப்பாட்டின் அடிப் படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து சுரேஷ் சலே கைது செய்யப்பட்டார் என்று கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றுக்கு குற்றப்புலனாய் வுத்துறை தகவல் தெரிவித்துள்ளது.

பிள்ளையானின் செயலாளராக இருந்த ஹன்ஸிர் ஆஸாத் மௌலானா என்பவரை மேற்கோள்காட்டி 'சனல் - 4' செய்திச் சேவை மேற்படி விட யத்தை அம்பலப்படுத்தி இருந்தது.

எது, எப்படியாயினும் ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலின் பின்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவினால் துவான் சுரேஷ் சலே அரச புலனாய்வு சேவையின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

அது மாத்திரமல்ல, யுத்த காலத்தில் புலிகளுக்கு எதிரான பல ஒளிவு - மறைவு நடவடிக்கைகளில் நேரடி யாகச் சம்பந்தப்பட்டவர் இந்த சுரேஷ் சலே.

யுத்தம் முடிந்த கையோடு மலேசியாவில் இருந்து புலிகளின் சர்வதேசப் பொறுப்பாளரான கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதனை கைவிலங்கிட்டு விமானத்தில் அழைத்து வந்தவரே இவர்தான்.

யுத்த காலத்தில் இடம்பெற்ற பல இரகசிய நடவடிக்கைகளின் உள்ளார்ந்தங்களை அறிந்த ஒரு நபர் சுரேஷ் சலே. அவரது கைது அந்தக் காலத்தில் இடம் பெற்ற பல விடயங்களை வெளிக்கொணர வாய்ப்பை ஏற்படுத்தக் கூடும்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பலரை - பல அப்பாவிகளை - பல வருடங்கள் மாட்டி விட்டமையில் சம்பந்தப்பட்ட சுரேஷ் சலே இப்போது தாமே அந்தச் சட்டத்தின் கீழ் தடுப்பு காவலுக்குள் செல்லும் நிலைமை ஏற்பட்டிருப்பது வரலாற்றின் ஒரு திருப்புமுனைதான்.

இந்த கைது அந்தக் காலத்தில் - இருண்ட யுகத்தில் - இடம்பெற்ற பல அமானுஷ்யங்கள் பற்றிய விடயங்களை அம்பலத்துக்குக் கொண்டு வர வழி செய்தால் அது நன்றாக இருக்கும்.



# உலக பௌத்த சங்க சம்மேளனத்தின் 60 ஆவது ஆண்டு விழா இலங்கையில்

## ஏற்பாடுகளை முன்னெடுக்க ஜனாதிபதி பணிப்புரை

உலக பௌத்த சங்க சம்மேளனத்தின் 60 ஆவது ஆண்டு விழா மற்றும் 11 ஆவது பொதுச் சபையின் 2 ஆவது நிறைவேற்றுக் குழுக் கூட்டம், எதிர்வரும் நவம்பர் 28 முதல் டிசம்பர் 2 வரை இலங்கையில் நடைபெறவுள்ளன.

அதன் ஏற்பாட்டு நடவடிக்கைகள் குறித்த விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

உள்நாட்டு, வெளிநாட்டுத் தேரர்கள் மற்றும் பொதுமக்களின் பங்கேற்புடன் நடைபெறவுள்ள இந்த விழாவிற்கு தேவையான அரச அனுசரணை வழங்க புத்தசாசன அமைச்சர், ஜனாதிபதி அலுவலகத்தின் பிரதிநிதி, பாதுகாப்புச் செயலாளர், பொலிஸ்மா அதிபர் மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் அதிகாரிகளை உள்ளடக்கிய ஒருங்கிணைப்புக் குழுவொன்றை நியமிக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

1966 ஆம் ஆண்டு இலங்கையில் முதன்முதலில் நிறுவப்பட்ட இந்த சர்வதேச பௌத்த அமைப்பின் விழாவை, அது நிறுவப்பட்ட நாட்டில் நடத்துவது ஒரு தனித்துவமான மைல்கல் என்று ஏற்பாட்டுக் குழு சுட்டிக்காட்டியது.

தேரவாதம், மகாயானம் மற்றும் வஜ்ராயனம் ஆகிய அனைத்து பௌத்த மரபுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி 50 நாடுகளைச் சேர்ந்த சுமார் 600 பிரதிநிதிகள், இந்த நிகழ்வுக்காக இலங்கைக்கு வருகை தரவுள்ளதுடன், மூன்று நிகாயாக்களைச் சேர்ந்த மகாநாயக்க தேரர்கள் உட்பட 500 இந்நாட்டுத் தேரர்களின் பங்கேற்புடன் இந்த விழா நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு பூட்டான் மன்னர் உட்பட பௌத்த நாடுகளின் இராஜதந்திரிகளுக்கு அழைப்பு விடுக்க எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் ஆரம்ப நிகழ்வு, நவம்பர் 28 ஆம் திகதி கொழும்பு, நாகானந்த பௌத்த பல்கலைக்கழகத்தில் நடைபெறும். நிறைவேற்றுக் குழுக் கூட்டம் மற்றும் கல்வி மாநாடு நவம்பர் 29 ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்டுள்ளன.

உலக அமைதிக்காக அநுராதபுரம் ஜய ஸ்ரீமஹா போதியில் நடைபெறும் சிறப்பு வழிபாட்டு நிகழ்ச்சி நவம்பர் 30 ஆம் திகதி மாலை நடைபெறும். டிசம்பர் முதலாம் திகதி ருவன்வெளி சேய மற்றும் கண்டி தலதா மாளிகையை மையமாகக் கொண்டு சமய அனுஷ்டானங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

"வஸ்" காலம் முடிந்த பிறகு நடைபெறும் இந்த விழா, இலங்கையில் பௌத்த மறுமலர்ச்சி குறித்து உலகிற்கு சிறந்த செய்தியை வழங்கும் என்றும், நாட்டின் சுற்றுலாத் துறையின் மேம்பாட்டிற்கு பெரிதும் பங்களிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த ஆண்டு நிறைவு நிகழ்வை தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாக ஏற்பாடுசெய்வதன் அவசியத்தை இதன்போது சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்கு அரசு முழு ஆதரவையும் வழங்கும் என்றும் தெரிவித்தார்.

மேலும், நியமிக்கப்படும் விசேட குழுவினால் அரசாங்கத் தரப்பு மற்றும் ஏற்பாட்டுக் குழு நிறைவேற்ற வேண்டிய பணிகளை உடனடியாக அடையாளம் கண்டு, எதிர்கால நடவடிக்கைகளைத் திட்டமிடுமாறு அறிவுறுத்திய ஜனாதிபதி, அதன் மூலம் இலங்கையின் விருந்தோம்பல் குறித்து மிகவும் சிறந்த செய்தியை முழு உலகிற்கும் எடுத்துக்காட்ட முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

வெளிநாட்டுத் தேரர்கள் மற்றும் பிரதிநிதிகள் இந்நாட்டிற்கு வருகை தரும்போதும், புறப்பட்டுச் செல்லும்போதும் விமான நிலையத்தில் சிறப்பு நுழைவாயில்களை நிறுவுதல் உள்ளிட்ட வசதிகளை வழங்குவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

மேலும், நிகழ்ச்சி நடைபெறும் நாகானந்த பௌத்த பல்கலைக்கழகத்திற்குச் சென்று, அதன் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் எதிர்காலத் திட்டங்களை ஆராய்ந்து, தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்திய ஜனாதிபதி, உலகின் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளின் பங்கேற்பை உறுதி செய்வதற்காக முறையான இராஜதந்திர அழைப்புகளைச் செய்வதன் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் பௌத்த மறுமலர்ச்சியை உலகிற்கு மீண்டும் உறுதிப்படுத்தவும், நாட்டின் கௌரவத்தை அதிகரிக்கவும் இந்த நிகழ்வு வழங்கும் வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டினார்.

ருஹுணு பல்கலைக்கழகத்தின் வேந்தர், உலக பௌத்த சங்க சம்மேளனத்தின் உப தலைவர், கலாநிதி வண, அக்குரெட்டியே நந்த நாயக்க தேரர், நாகானந்த பௌத்த பல்கலைக்கழகத்தின் உபவேந்தர், உலக பௌத்த சங்க சம்மேளனத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவு விழாக் குழுவின் தலைவர் கலாநிதி வண, போதாகம சந்திம நாயக்க தேரர் தலைமையிலான மகா சங்கத்தினர் மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே உட்பட அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.





# அனுராபுரத்தில் மேலதிக வகுப்புக்குச் சென்ற 9 வயதுச் சிறுமி வான் மோதி பரிதாப மரணம்!

## பாதசாரிக் கடவையிலும் பாதுகாப்பு இல்லை



அனுராபுரம், கெபித்திகொல்லேவ – பதவிய பிரதான வீதியின் 18ஆம் கட்டை பகுதியில் அமைந்துள்ள பாதசாரிக் கடவையில் வான் மோதி விபத்துக்குள்ளான 9 வயது சிறுமி, சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்து நிகழ்ந்து நான்கு நாள்களுக்குப் பிறகு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு அவர் உயிரிழுந்தார் என்று பதவிய பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

கடந்த 21ஆம் திகதி குறித்த சிறுமி மேலதிக வகுப்பொன்றுக்குச் செல்வதற்காக வீதியை கடக்க முற்பட்ட போது, வேகமாக வந்த வான் ஒன்று அவர் மீது மோதியுள்ளது. இதில் பலத்த காயமடைந்த சிறுமி உடனடியாக பதவிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் நேற்றுமுன்தினம் இரவு பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் கந்தூருவெவ, போகஹவெவ பகுதியைச் சேர்ந்த சனுல்லியா என்ற 9 வயது சிறுமியே உயிரிழந்துள்ளார்.

விபத்து நிகழ்ந்த வேளையில், சிறுமியை மோதிய வான் அவ்விடத்தில் நிறுத்தப்படாமல் அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தது. இருப்பினும், பின்னர் அந்த வான் சாரதி தானாகவே முன்வந்து பதவிய பொலிஸ் நிலையத்தில் வானுடன் சரணடைந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து பதவிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பாதசாரிக் கடவையில் இடம்பெற்ற இந்த அநியாய மரணம் அப்பகுதி மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# ஹொரணையில் கணவன் அடித்துக் கொலை! மனைவி உட்பட இருவர் பொலிஸாரால் கைது!!




(க.மகாதேவன்)

களுத்துறை, ஹொரணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போருவதண்ட பிரதேசத்தில், மனைவியின் தாக்குதலுக்கு இலக்காகி நபர் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்துத் தெரிய வருவதாவது:-

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை போருவதண்ட பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய நபர் ஒருவர், தனது வீட்டுக்கு அருகிலுள்ள வீடொன்றுக்குச் சென்று அங்கிருந்தவர்களுடன் தகராறில் ஈடுபட்டுள்ளார். இதன்போது ஆவேசமடைந்த அவர், அந்த வீட்டின் கதவு மற்றும் ஜன்னல்களைத் தாக்கிச் சேதப்படுத்தியுள்ளார்.

அந்த வீட்டில் இருந்த பெண், இது தொடர்பாக அந்த நபரின் மனைவிக்குத் தகவல் வழங்கியுள்ளார். உடனடியாகச் சம்பவ இடத்துக்கு வந்த மனைவி, மற்றைய பெண்ணுடன் இணைந்து தனது கணவனைத் துடைப்பத்தால் சரமாரியாகத் தாக்கியுள்ளார்.

இந்தத் தாக்குதலில் பலத்த காயமடைந்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இது குறித்து ஹொரணை பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுது.

இந்தச் சம்பவம் தொடர்பில் உயிரிழுந்தவரின் மனைவி மற்றும் மற்றைய பெண் ஆகிய இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை ஹொரணை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.






# அரசியல் அழுத்தங்களுக்கு அஞ்சாது செயற்படுங்கள்!

## மட்டக்களப்பில் அதிகாரிகளுக்கு அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி அறிவுறுத்தல்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

அரச அதிகாரிகள் எவ்வித அரசியல் அழுத்தங்களுமின்றி சுயாதீனமாக இயங்கி, மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முன்வர வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியான்மை அபிவிருத்தி அமைச்சருமான சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட திட்டமிடல் குழுக் கூட்டம், மாவட்ட அரச அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ் ஏற்பாட்டில் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது. இதில் தலைமை வகித்து உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய மற்றும் இடைநிறுத்தப்பட்டுள்ள பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டன.

குறிப்பாக அண்மைய வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிரான் பாலத்தை மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப ஆய்வுகளுடன் மீள நிர்மாணிப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

முந்தானையாறு திட்டத்தின் தற்போதைய நிலை மற்றும் ஏனைய நீர்ப்பாசனக் குறைபாடுகள் குறித்து அவதானம் செலுத்தப்பட்டது.

அதிகரித்து வரும் யானைத் தாக்குதல்களைக் கட்டுப்படுத்தத் தேவையான யானை வேலிகளைத் துரிதமாக அமைக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டது.




சட்டவிரோத மண் மற்றும் கிறவல் அகழ்வினால் ஏற்படும் சூழல் பாதிப்புகளைத் தடுக்க உயர்மட்டக் குழு ஒன்றை அமைக்குமாறு அமைச்சர் பணிப்புரை விடுத்தார். அத்துடன், மண் அகழ்வுக்கான இடங்களை முறையாக அடையாளம் கண்டு, சட்டப்பூர்வமான முறையில் அனுமதி வழங்கப்பட வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

வெள்ளப் பெருக்கினால் அறுவடை செய்த நெல்லினை உலர வைக்க முடியாமல் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நலன் கருதி, புதிய நெல் உலர்த்திகளை கொள்வனவு செய்வது தொடர்பாகவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

“மாவட்டத்தின் அபிவிருத்தி குறித்து உயர் அதிகாரிகள் என்னுடன் நேரடியாகக் கலந்துரையாடலாம். அரசியல் தலையீடுகளுக்கு அஞ்சாமல், மாவட்டத்தின் உண்மையான பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி மக்கள் சேவையை முன்னெடுங்கள்.” – என்று அமைச்சர் அதிகாரிகளை ஊக்கப்படுத்தினார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண உயர்மட்ட அதிகாரிகள், முப்படை மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.











# “பழசும் வேண்டாம் புதுசும் வேண்டாம்”

## பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிராக யாழில் சனியன்று மாபெரும் போராட்டம்

**(எஸ்.நிதர்ஷன்)**

“பழசும்வேண்டாம்,புதுசும்வேண்டாம்” எனும் தொனிப்பொருளில், பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக நீக்கக் கோரி நாளைமறுதினம் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் மாபெரும் போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

தாயகச் செயலணியின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இப்போராட்டம், அன்றைய தினம் காலை யாழ். பொது நூலகத்திற்கு முன்பாக ஆரம்பமாகவுள்ளது. அங்கிருந்து பேரணியாகச் செல்லும் போராட்டக்காரர்கள், வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தை சென்றடைந்து தமது கோரிக்கைகளை முன்வைக்கவுள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, தாயகச் செயலணியின் பிரதிநிதிகள் இப்போராட்டம் குறித்த விவரங்களை வெளியிட்டனர். இதன்போது, கட்சி பேதங்களைக் கடந்து அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரையும் இப்போராட்டத்தில் கைகோர்க்குமாறு அவர்கள் அழைப்பு விடுத்தனர்.

ஊடகச் சந்திப்பில் பிரதிநிதிகள் மேலும் தெரிவித்ததாவது:-

“தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தினால் தமிழ் மக்கள் நீண்டகாலமாகப் பல்வேறு இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர். இச்சட்டத்தை நீக்குவதாக வாக்குறுதியளித்தே தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஆனால், பழைய சட்டத்தை நீக்குவதற்குப் பதிலாக, அதற்கு மாற்றாகப் புதியதொரு சட்டத்தைக் கொண்டுவர அரசாங்கம் முயற்சிக்கிறது.

எம்மைப் பொறுத்தவரை இச்சட்டம் பழையதோ அல்லது புதியதோ, அதன் வடிவம் எதுவாக இருந்தாலும் அது தேவையற்றது. மக்களைப் பாதிக்கும் இத்தகைய கொடிய சட்டங்கள் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. அரசின் புதிய சட்ட முயற்சியைக் கண்டித்தும், நீதியை வலியுறுத்தியுமே இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.” - என்று அவர்கள் சுட்டிக்காட்டினர்.

# கிவுல் ஓயாவின் பின்னணி சிங்களக் குடியேற்றமல்ல!

## இப்படி அமைச்சர் சந்திரசேகர் கூறுகின்றார்



“கிவுல் ஓயா திட்டத்தின் பின்னணி சிங்களக் குடியேற்றமல்ல. மாறாக, விவசாயத்துக்குத் தேவையான தண்ணீரை சேமிப்பதே நோக்கமாகும்” - என்று அமைச்சர் இ.சந்திரசேகர் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பிரஜாசக்தி உறுப்பினர்களுக்கான நியமனக்கடிதம் வழங்கும் நிகழ்வில் அமைச்சர் சந்திரசேகர் மேலும் தெரிவித்ததாவது:-

“கிவுல் ஓயா திட்டத்தை வைத்து பல்வேறு விதமான கருத்துகள் பரப்பப்படுகின்றன. சிங்களக் குடியேற்றத்தை நோக்கமாகக் கொண்டு கிவுல் ஓயா திட்டம் அமைக்கப்படவில்லை. மாறாக, விவசாயத்தை மேம்படுத்துவதற்காகவே அந்தத் திட்டம் கொண்டுவரப்படுகின்றது. அங்கு குடியேற்றங்களை மேற்கொண்டால் தமிழ்க் குடியேற்றங்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

கடந்த அரசுகளில் இடம்பெற்ற ஊழல்கள் மற்றும் மோசடிகள் தொடர்பில் நாங்கள் தீர்க்கமாக விசாரித்து வருகின்றோம்.

ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசு கடந்த அரசுகளைப் போன்றதல்ல. இந்த அரசாங்கத்தில் வெளிப்படைத்தன்மை உள்ளது.

மக்களின் நலனுக்கு முன்னுரிமை வழங்கியே அனைத்துத் திட்டங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.” - என்றார்.

# இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு ஐரோப்பிய சந்தையில் வாய்ப்பு

## ஜேர்மனுடன் விசேட ஒப்பந்தம்




இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை நாட்டின் ஏற்றுமதித்துறையை ஊக்குவிக்கும் நோக்கில் ஜேர்மனின் இறக்குமதி ஊக்குவிப்பு முகவர் நிலையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திடத் திட்டமிட்டுள்ளது.

இலங்கையின் ஏற்றுமதித் துறையை வலுப்படுத்தும் நோக்கிலேயே இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்மூலம், இலங்கை ஏற்றுமதியாளர்கள் ஐரோப்பிய சந்தைகளை மிக இலகுவாக அணுகுவதற்கு இந்த உடன்படிக்கை வழிவகை செய்யும்.

குறிப்பாக சிறு மற்றும் நடுத்தர அளவிலான ஏற்றுமதியாளர்கள் மற்றும் பெண்களால் முன்னெடுக்கப்படும் வணிகங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் திட்டத்தை முறைப்படுத்துவதற்காக முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை ஏற்கனவே அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்தக் கூட்டாண்மையானது இலங்கையின் பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்புகளை சர்வதேச தரத்திற்கு உயர்த்துவதற்கும், ஐரோப்பிய நாடுகளில் புதிய வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கும் பெரும் உதவியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### சட்டத்தரணி தம்பதி கொலை:

# 11 கொலைகளுடன் தொடர்புடைய முன்னாள் கடற்படை சிப்பாய் கைது!

## அவருடன் மேலும் இருவர் சிக்கினர்





கொழும்பு, தலங்கம, அக்குரேகொட பகுதியில் சட்டத்தரணி ஒருவரையும் அவரது மனைவியையும் சுட்டுக் கொலை செய்தசம்பவத்துடன்தொடர்புடைய இரண்டாவது துப்பாக்கிதாரி மற்றும் அவருடன் இருந்த இருவர் மொனராகலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தற்போது மேலதிக விசாரணைகளுக்காக கொழும்புக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் என்று மேல் மாகாண தெற்கு குற்றத் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட பிரதான துப்பாக்கிதாரி முன்னாள் கடற்படை சிப்பாய் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட ஆரம்பக்கட்ட விசாரணைகளில் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர் தென் மாகாணத்தில் மட்டும் பல துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களை நடத்தி, இதுவரை 11 பேரைக் கொலை செய்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இத்தனை கொலைகளைச் செய்த போதிலும், இதுவரை எந்தவொரு சம்பவத்திற்காகவும் இவர் பொலிஸாரினால் கைது செய்யப்படாமல் தலைமறைவாக இருந்து வந்துள்ளார்.

இந்த இரட்டைக்கொலைச் சம்பவம் தொடர்பாக ஏற்கனவே ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சகோதரர்கள் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களில் மூவருக்கு எதிராக 90 நாள்கள் தடுப்புக்காவல் உத்தரவு பெறப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையிலேயே, தற்போது இரண்டாவது துப்பாக்கிதாரியும் சிக்கியுள்ளார்.

சட்டத்தரணி மற்றும் அவரது மனைவியின் கொலைக்கான உண்மையான பின்னணி மற்றும் இந்தப் பாதாள உலகக் கும்பலின் ஏனைய தொடர்புகள் குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### புலிகளை அழித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

“விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிப் போரின் போது சுரேஷ் சலே நாட்டுக்காகப் பாரிய பங்களிப்பை வழங்கிய ஓர் அதிகாரி ஆவார். அத்தகைய ஒருவரைப் பழிவாங்கும் நோக்கம் பிரிவினைவாத சக்திகளுக்கு நீண்டகாலமாகவே இருந்து வருகின்றது. தற்போது நடைபெற்றுள்ள இந்தக் கைது நடவடிக்கையின் பின்னணியில் அத்தகைய சக்திகளின் தூண்டுதல் இருக்கலாம் என்ற சந்தேகம் எழுகின்றது.

உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்தின் உண்மையான சூத்திரதாரி யார் என்பது கண்டறியப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், அந்தத் தாக்குதலுடன் தொடர்பில்லாத அப்பாவிகளைத் திட்டமிட்ட அடிப்படையில் இலக்கு வைத்துத் தண்டிப்பதை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். இத்தகைய அநீதியான செயற்பாடுகளுக்கு எதிராக நாம் முன்னின்று குரல் கொடுப்போம்.” – என்றார்.





# மன்னாரில் முப்பது விவசாயிகளுக்கு நிலக்கடலை விதைகள் விநியோகம்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டத்தில் அண்மையில் வீசிய புயலால் வாழ்வாதாரத்தை இழந்த 30 விவசாயிகளுக்கு, மேட்டு நிலப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் வகையில் நிலக்கடலை விதைகள் வழங்கி வைக்கப்பட்டன.

மன்னார் பிரதி விவசாயப் பணிப்பாளர் பணிமனையின் பயிற்சி மண்டபத்தில் நேற்று மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிறாடோ தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

விதைகள்வழங்கும்நிகழ்விற்குமுன்னதாக, விவசாயிகளுக்குத் தெளிவான தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை வழங்கும் நோக்கில் விசேட பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

மன்னார் மாவட்ட விவசாய பாடவிதான உத்தியோகத்தர் ஜெஸ்மன் மார்க் பயிற்சிகளை வழங்கினார்.

பயிற்சியின் நிறைவில் தெரிவு செய்யப்பட்ட 30 பயனாளிகளுக்கும் நிலக்கடலை விதைகள் கையளிக்கப்பட்டன.

இதன் போது மெசிடோ நிறுவன பணியாளர்களும் கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு நிலக்கடலை விதைகளை வழங்கி வைத்தனர்.











# முல்லையில் C4 வெடிமருந்துடன் இளைஞர் கைது

(பா.சதீசன்)

முல்லைத்தீவு கள்ளப்பாடு பகுதியில் C4 வகை வெடிமருந்தை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 26 வயதுடைய இளைஞர் ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று மாலை கள்ளப்பாடு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது இந்த இளைஞர் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர் கள்ளப்பாடு தெற்கு பகுதியை சேர்ந்தவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து சுமார் 2 கிலோ 700 கிராம் அளவுடைய C4 வெடிமருந்து மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞன் மேலதிக விசாரணைகளுக்காக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதுடன், சந்தேகநபர் இன்றையதினம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# ஆக்கிரமிப்பு நிலங்களில் தாங்கள் விளைவித்த நெல்லை படையினர் அடாவடித்தனமாக சந்தைப்படுத்துகின்றனர்!

## சீற்றத்துடன் கண்டிக்கின்றார் ரவிகரன் எம்.பி.





**(பா.சதீசன்)**

விவசாயிகள் நெல்சந்தைப்படுத்தல் சபையினூடாக தமது நெல்லை சந்தைப் படுத்துவதற்கு பாரிய நெருக்கடிளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் எனச் சுட்டிக்காட்டிய வன்னிமாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், தமிழ் மக்களிடமிருந்து ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளில் உற்பத்தி செய்யப்பட்ட தமது நெல்லஜ் இராணுவத்தினர் அடாவடியாக நெல்சந்தைப்படுத்தல் சபையூடாக சந்தைப்படுத்தல் செய்துள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, நீராவிப்பிட்டிப் பகுதியில் அமைந்துள்ள நெல்சந்தைப்படுத்தல் சபைக்குரிய நெற்களஞ்சியசாலையில் 24.02.2026 அன்று விவசாயிகள் தமது நெல்லினை சந்தைப்படுத்துவதற்காக காத்திருந்தபோது அடாவடியாக அங்கு நுழைந்த இராணுவத்தினர் இவ்வாறு தமது 70 மூடைகளுக்கும் மேற்பட்ட நெல்லினை சந்தைப்படுத்தல் செய்துள்ளனர் எனவும் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் இராணுவத்தின் இத்தகைய அடாவடிச் செயற்பாட்டை வன்மையாக கண்டித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர், முல்லைத்தீவு உட்பட வடக்கு கிழக்கு எங்குமுள்ள இராணுவத்தினர் உடனடியாக வெளியேற வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

முல்லைத்தீவு மாவட்டத்தில் நெல் சந்தைப்படுத்தல் சபைக்குரிய நெற் களஞ்சியசாலைகளில் ஏற்கனவே 202.5 சிறுபோகத்தில் கொள்வனவுசெய்யப்பட்ட நெல் மூடைகள் அகற்றப்படாமல் நிறைந் திருப்பதால் தமக்கு களஞ்சியசாலை வசதி இல்லாத சிக்கல் நிலை ஏற்பட்டுள்ள தாகவும், எனவே விவசாயிகளிடமிருந்து 2025 - 2026ஆம் ஆண்டுகளுக்குரிய பெரும்போகத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல்லைக் கொள்வனவு செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்து வந்தது.

இந்நிலையில் விவசாயிகளிடமிருந்து நெற்கொள்வனவு உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென நாடாளு மன்றில் பேசியமையுடன், அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டங்களிலும் வலியுறுத்தினேன். அத்தோடு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் விவசாயிகளிடமிருந்து உடனடியாக நெற்கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டு மென தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தேன்.

அதற்கமைய தற்போது 14வீதம் மற்றும் 14வீதத்திற்கும் குறைந்த ஈரப்பதனுடைய நெல்லை, ஒரு விவசாயியிடமிருந்து 2,500 கிலோ என்ற மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நெல் சந்தைப்படுத்தல் சபை கொள்வனவு செய்ய ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில் பெருத்த சிரமங்களுக்கு மத்தியில் நெல் மூடைகள் ஏற்றப்பட்ட டிராக்டர்களை வரிசையில் நிறுத்தி விவசாயிகள் நெல்லை சந்தைப் படுத்துவதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

இவ்வாறு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நெற்கொள்வனவு இடம்பெறுவதால் தமது மிகுதி நெல்லைக் குறைந்த விலையில் தனியார் கொள்வனவாளர்களுக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலை காணப்படுவதாகவும் விவசாயிகள் எம்மிடம் முறையீடுகளையும் செய்து வருகின்றனர்.

இத்தகைய சூழலில் இவ்வாறு விவசாயிகள் தமது நெல்லைச் சந்தைப்படுத்துவதில் பாரிய இடர்பாடுகளுக்கு முகங் கொடுத்துக் கொண்டிருக்கும்போது, இராணுவத்தினர் எமது பகுதிகளில் அத்துமீறி கையகப்படுத்தி வைத்திருக்கின்ற எமது தமிழ் மக்களின் காணிகளில் நெற்பயிற்செய்கை மேற்கொண்டு, அந்த நெல்லினை நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு விற்பனை செய்கின்ற சம்பவங்களும் இடம் பெற்று வருகின்றன.

குறிப்பாக 24.02.2026 செவ்வாய்கிழமை மாலை 07.30மணியளவில் முல்லைத்தீவு நீராவிப்பிட்டி பகுதியில் அமைந்துள்ள நெல் சந்தைப்படுத்தல் சபைக்குரிய நெற்களஞ்சியசாலையில் இவ்வாறு இராணுவத்தினரால் 70 மூடைகளுக்கும் மேற்பட்ட நெல்லை சந்தைப்படுத்தல் செய்துள்ளனர். ஏற்கனவே எமது விவசாயிகள் தமது நெல்லைச் சந்தைப்படுத்தல் செய்வதற்கென வீதியில் நெல்மூடைகள் ஏற்றப்பட்ட டிராக்டர்களை நிறுத்திக் காத்துக்கொண்டிருக்கும்போது இராணுவத்தினர் இவ்வாறு அடாவடித்தனமாக நுழைந்து இராணுவ வாகனத்தில் ஏற்றி வந்த நெல்லை விற்பனை செய்துவிட்டுச் சென்றனர் என விவசாயிகளால் எமக்கு முறையீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் நெல் சந்தைப்படுத்தல் சபைக் குரிய முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் இராணுவத் தினரிடமிருந்து நெற்கொள்ளவைச் செய்வதற்கு மறுப்புத் தெரிவித்திருந்த நிலையிலும், நெல் சந்தைப்படுத்தல் சபையின் வடமாகாண பொறுப்பதிகாரியின் உத்தரவின் பேரிலேயே நெல் சந்தைப்படுத்தல் சபையினால் நெற்கொள்வனவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எமது விவசாயிகள் தமது நெல்லை சந்தைப்படுத்துவதற்கு பலத்த நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்ற நிலையில், இராணுவத்தினர் இவ்வாறு எமது விவசாயிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற விதத்தில் அடாவடித்தனமாகச் செயற்படுவதை வன்மையாக் கண்டிக்கின்றேன்.

இராணுவமெனில் நாட்டின் பாதுகாப்புச் செயற்பாடுகளிலேயே கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு நாட்டிலுள்ள எமது தமிழ் மக்களின் வாழ்வாரத்தை சிதைக்கின்ற செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது.

ஆனால் இங்குள்ள இராணுவத்தினர் எமது தமிழ் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கின்ற வகையில் தேநீர்கடைகள், உணவகம் மற்று அழககங்கள் என்பவற்றையும் நடாத்தி வருகின்றனர்.

அத்தோடு இராணுவத்தினர் எமது தமிழ் மக்களின் பயிர்ச்செய்கை நிலங்களையும் ஆக்கிரமித்து அங்கு பயிர்ச்செய்கை மேற்கொண்டு, இவ்வாறு எமது விவசாயிகளின் வாழ்வாதரத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்ற விதத்திலும்

தொடர்ச்சி▼

# ஆக்கிரமிப்பு நிலங்களில் தாங்கள் விளைவித்த நெல்லை படையினர் அடாவடித்தனமாக சந்தைப்படுத்துகின்றனர்!





தொடர்ச்சி▲

செயற்படுகின்றனர்.

இதுதவிர வடக்கு கிழக்கில் அதிகரித்துள்ள இராணுவப் பிரசன்னத்தால் எமது தமிழ் மக்கள் ஒருவித அச்சுறுத்தல் நிலையுடனே வாழ்ந்து வருகின்றனர்.

எனவேதான் வடக்கு, கிழக்கில் அதிகரித்துக்காணப்படுகின்ற பாதுகாப்பு படைகளை இங்கிருந்து அகற்றுமாறு எம்மால் தொடர்ச்சியாக ஆட்சியாளர்களிடம் வலியுறுத்தப்படுகின்றது.

அதிகரித்துள்ள இராணுவத்தினரின் பிரசன்னத்தால் எமது மக்கள் அச்சுறுத்தல் நிலையுடன் தொடர்ந்தும் தமது வாழ்வைக் கழிக்கமுடியாது. இராணுவத்தினரால் இவ்வாறு எமது மக்கள் தொடர்ச்சியாக வாழ்வாதாரப் பாதிப்புக்களுக்கும் முகங்கொடுக்கமுடியாது.

எனவே இராணுவத்தினர் எமது மக்களின் நிலங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருந்து எமது மக்களுக்கு நெருக்கடிகளை கொடுத்துக் கொண்டிருக்காமல் இங்கிருந்து உடனடியாக வெளியேறவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

நெல் சந்தைப்படுத்தல் சபையும் நெல் களஞ்சியசாலைகளிலிருக்கின்ற ஏற்கனவே உள்ள நெல்லை அகற்றி விவசாயிகளிடமிருந்து முழுமையாக நெற்கொள்வனவை மேற்கொள்ள வேண்டும்.

இராணுவத்தினரின் இத்தகைய அடாவடிச் செயற்பாட்டிற்கு எனது வன்மையான கண்டனங்களை மீண்டும், மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இராணுவத்தினரின் இத்தகைய அடாவடித்தனமான செயற்பாடுதொடர்பாக சந்தர்ப்பம்கிடைக்கும்போதுநாடாளுமன்றிலும் வெளிப்படுத்துவதுடன், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் எனது எதிர்ப்பினைத் தெரிவிப்பேன்.- எனவும் தெரிவித்தார்.

# மடு தேசிய பூங்காவை சரணாலயமாகவே பேண சத்தியலிங்கம் எம்.பி. பிரேரணை



மடு தேசிய பூங்காவை தொடர்ந்தும் சரணாலயமாகப் பேணுவதற்கான அனுமதியை அமைச்சரவையில் பெறுவதற்காக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் பிரேரணை ஒன்றை முன்வைத்துள்ளார்.

மடு பிரதேச செயலாளர் பிரிவிற்கான அபிவிருத்திக்குழு கூட்டம் நேற்று 25 ஆம் திகதி மடு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் எதிர்கால அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக வனவளத்திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தால் விடுவிக்கப்படவேண்டிய காணிகள் தொடர்பாக நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது.

இரணைஇலுப்பைக்குளம் கிராம சேவையாளர் பிரிவில் உள்ள பெரிய பண்டிவிரிச்சான்- முள்ளிக்குளம் வீதியை மக்கள் பாவனைக்கு மேம்படுத்த பிரதேச செயலகத்தால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அபிவிருத்திக் குழுவின் பரிந்துரை கோரப்பட்டபோது வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர் மேலிடத்திடம் கோரிக்கை வைப்பதாக சபைக்கு அறிவித்தார். ஆனால் இவ்வீதியானது மாந்தை மேற்கு பிரதேச சபையால் வர்த்தமானியூடாக பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேச சபைக்கு சொந்தமான வீதி என பிரதேச சபையின் தவிசாளர் அறிவித்தார்.

அப்போது கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் சத்தியலிங்கம் விசேட வர்த்தமானி அறிவித்தலூடாக (Extraordinary No. 1920/3 on June 22, 2015) 2015 ஆம் ஆண்டு மடு சரணாலயமாக இருந்த காடுகள் எந்தவித கலந்துரையாடலும் இன்றி 631 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பை உள்ளடக்கிய மடு - தேசிய பூங்காவாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இத்தேசிய பூங்கா மக்களின் வாழ்விடங்கள், வீதிகள், வணக்க நிலையங்கள் மற்றும் விவசாய நிலங்கள் உள்ளடங்கியதாக உள்ளது.

28/06/1968ஆம் ஆண்டு ஐம்பதிற்கும் குறைந்த சதுர கிலோமீற்றிற்கும் குறைவான நிலப்பரப்புடன் பிரகடனப்படுத்தப்பட்ட சரணாலயம் எந்த கலந்துரையாடலும் இன்றி 631 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பை உள்ளடக்கிய தேசிய பூங்காகவாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால் தற்போது அங்கு வாழும் மக்கள் எதிர்காலத்தில் பல பிரச்சினைகளை எதிர்கொள்வார்கள் எனத் தெரிவித்தார்.

சரணாலயமாக உள்ளபோது அப்பிரதேசம் ஊடாக மக்கள் பயன்படக்கூடிய அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மக்கள் அந்த சரணாலயத்தினூடாக பயணித்த பாதைகள், வயல்கள் என எந்த பயன்பாட்டையும் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாத நிலைவரும் என எச்சரித்தார்.

எனவே 2015ஆம் ஆண்டின் விசேட வர்த்தமானியை இரத்துச்செய்யுமாறும், தொடர்ந்தும் சரணாலயமாகவே இப்பிரதேசத்தை பேனுமாறும் முன்மொழிவை பிரேரித்து இப்பிரேரணையை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்க அபிவிருத்தி குழுவின் தலைவரை கேட்டுக்கொண்டார்.

இப்பிரேரணையை நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் வழிமொழிய சபை ஏற்றுக்கொண்டது.



# பயங்கரவாத தடைச் சட்டமும் வேண்டாம் அதற்கு மாற்றீடான சட்டமும் வேண்டாம்

## பருத்தித்துறை நகர சபையில் நேற்றுத் தீர்மானம்

**(மரியசீலன் திலைக்ஸ்)**

பயங்கரவாதத் தடை சட்டத்தை நீக்க கோரியும் அரசாங்கத்தால் கொண்டு வரப்படவிருக்கின்ற பயங்கரவாதத் திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சடடத்தையும் கொண்டுவர வேண்டாம் என்று வலியுறுத்தியும் நேற்றுப் பருத்தித்துறை நகரசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகர சபை அமர்வு தவிசாளர் வின்சன் டீ போல் டக்ளஸ் போல் தலைமையில் நேற்று பிற்பகல் 2:30 மணியளவில் இரண்டு நிமிட அகவணக்கத்துடன் ஆரம்பமானது. இதனம்போது தவிசாளர் விசன்ட் டீ போல் டக்ளஸ் போலினால் கொண்டுவரப்பட்ட மேற்படி பிரேரணை 12 உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

இதில் தேசிய மக்கள் சக்தியின் உறுப் பினர்கள் 2 பேரும் இந்தத் தீர்மான விட யத்திலிருந்து விலகியிருந்தனார்.

மொத்தம் 15 உறுப்பினர்களில் ஓர் உறுப்பினர் நேற்றைய அமர்வில் கலந்து கொள்ளவில்லை.







# வரி செலுத்துவோரை கௌரவிக்க புதிய சலுகை அட்டைத் திட்டம்

## உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிமுகம்

பொறுப்புள்ள பிரஜைகளாக முறையாக வரி செலுத்துவோரை ஊக்குவிப்பதற்கும் அவர்களைக் கௌரவிப்பதற்குமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் விசேட "சலுகை அட்டை" முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் வரி செலுத்தும் பிரஜைகளுக்கு உபகாரமாக இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

**சலுகை அட்டையைப் பெறுவதற்கான தகுதிகள்:**

பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் தனிநபர் வரி செலுத்துவோர் மட்டுமே இந்த அட்டையைப் பெறத் தகுதியுடையவர் ஆவர்.

முந்தைய மதிப்பீட்டு ஆண்டிற்கான வருமான வரித் தொகையை முழுமையாகவோ அல்லது மேலதிகமாகவோ செலுத்தியிருத்தல் வேண்டும்.

வருமான வரி அறிக்கையை குறித்த ஆண்டின் நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்பாக சமர்ப்பித்திருக்க வேண்டும்.

அனைத்து வரிப் பணமும் (சுய மதிப்பீட்டு கொடுப்பனவுகள் உட்பட) உரிய திகதிக்கு முன்னதாக செலுத்தப்பட்டிருக்க வேண்டும்.

வரி செலுத்துவோரின் கடந்தகால வரி வரலாறுகள் திருப்திகரமாக அமைந்திருக்க வேண்டும்.

**அட்டை வகைகள்:**

வரி செலுத்தும் தொகையின் அடிப்படையில் இரண்டு பிரிவுகளில் இந்த அட்டைகள் வழங்கப்படுகின்றன.




தங்க அட்டை: முந்தைய மதிப்பீட்டு ஆண்டில் 5 மில்லியன் ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை வருமான வரியாகச் செலுத்தியவர்களுக்கு இது வழங்கப்படும்.

வெள்ளி அட்டை: முந்தைய மதிப்பீட்டு ஆண்டில் 3 மில்லியன் ரூபா முதல் 5 மில்லியன் ரூபாவிற்கும் குறைவான தொகையை வரியாகச் செலுத்தியவர்களுக்கு இது வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

தகுதியுள்ளவர்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்கள இணையதளத்தில் உள்ள படிவத்தைப் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பங்களை ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னதாக வருமானக் கண்காணிப்பு பிரிவின் ஆணையாளருக்கு அனுப்ப வேண்டும்.


2024/2025 மதிப்பீட்டு ஆண்டிற்கான வருமான அறிக்கை சமர்ப்பிக்கும் காலம் 2025.12.31 வரை நீடிக்கப்பட்டுள்ளதால், சலுகை அட்டைக்கான விண்ணப்பங்கள் 2026.02.28 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்பத்துடன் வருமான வரி அறிக்கையின் பிரதி, தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டின் பிரதி, T-10 சான்றிதழின் பிரதி (தேவையெனில்) இணைக்க வேண்டும்.

விண்ணப்பங்களை நேரில் சமர்ப்பிக்கலாம் அல்லது rm@ird.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம். அனைத்துத் தகுதிகளும் உறுதிப்படுத்தப்பட்ட பின் 3 வாரங்களுக்குள் சலுகை அட்டை விநியோகிக்கப்படும் எனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# நிதிச்சலவை வழக்கிலிருந்து டெய்சி பொரஸ்ட் விடுதலை

நிதிச்சலவை தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கிலிருந்து யோஷித ராஜபக்ஷவின் பாட்டியான டெய்சி பொரஸ்ட்டை விடுதலை செய்ய கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.



இந்த வழக்கில் யோஷித ராஜபக்ஷவிற்கு எதிராக மாத்திரம் குற்றச்சாட்டுகளைத் தொடரப்போவதாக சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்திற்கு அறிவித்ததைத் தொடர்ந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

98 வயதான டெய்சி பொரஸ்ட், விசாரணைகளை எதிர்கொள்ளும் அளவிலான மனநிலையில் இல்லை என அவரது தரப்பு சட்டத்தரணிகள் ஏற்கனவே நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதன்படி, டெய்சி பொரஸ்ட் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதுடன், யோஷித ராஜபக்ஷவிற்கு எதிரான வழக்கு விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளன.



# அதிக ஆபத்துள்ள பகுதிகளில் 12,301 வீடுகள் உடனடியாக வெளியேற மக்களுக்கு எச்சரிக்கை

அதிக ஆபத்துள்ள பகுதிகளில் அமைந்துள்ள 12,301 வீடுகள் மக்கள் வசிப்பதற்குப் பொருத்தமானதல்ல என்று தெரியவந்துள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

மண்சரிவு ஆபத்துள்ள பகுதிகளில் அமைந்துள்ள இந்த 12,301 வீடுகளும் மக்கள் வாழ்வதற்கு பொருத்தமற்றது என்பதால் அங்குள்ள மக்களை உடனடியாக வெளியேற்ற வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, டித்வா சூறாவளியினால் பாதிக்கப்பட்ட தொடருந்து பாதைகளைச் சீரமைப்பதற்குத் தாமதம் ஏற்பட்டுள்ளதால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர் என ரயில் அதிபர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

ரயில் சேவையை மீண்டும் வழமைக்குக் கொண்டுவருவதற்கு உரிய திட்டங்கள் இல்லாதமையினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

# அமெரிக்க டொலர் வருமானம் இலங்கை 13.7 வீதம் அதிகரிப்பு

இலங்கையின் 2026 ஜனவரி மாதத்திற்கான மொத்த ஏற்றுமதி வருமானம் 1,552 மில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியுள்ளதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

கடந்த 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில், இது 13.7 சதவீத வளர்ச்சியாகும் என அதன் தலைவர் மங்கள விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

வர்த்தகப் பொருள்கள் ஏற்றுமதி மூலம் 1,165 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானம் கிடைத்துள்ளது. இது கடந்த ஆண்டை விட 10.5 வீத வளர்ச்சியாகும்.

சேவைத் துறை மூலம் 367 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 24.5 வீதம் என்ற குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

கடந்த மாதத்தில் வர்த்தகப் பொருள்கள் மற்றும் சேவைத் துறைகளில் பிரிவுகள் சிறப்பான பங்களிப்பை வழங்கியுள்ளன.

குறிப்பாக தேயிலை, தேங்காய், இறப்பர், உணவு மற்றும் பானங்கள் முக்கிய பங்கு வழங்கியுள்ளன.

ஏனைய துறைகளில் மின்சாரம் மற்றும் மின்னணு பொருட்கள், மரக்கறிகள், பழங்கள் மற்றும் கடல் உணவுகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

சேவைத்துறையில் தகவல் தொழில்நுட்பத் துறை சேவை ஏற்றுமதியில் முன்னணி வகிக்கிறது.

மொத்தமாகப் பார்க்கையில், 2026 ஆம் ஆண்டின் ஆரம்பம் இலங்கையின் ஏற்றுமதித் துறைக்கு மிகவும் சாதகமான ஒன்றாக அமைந்துள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.





# களுத்துறை துப்பாக்கிச் சூட்டு சம்பவம் பொதுமக்கள் உதவியை நாடும் பொலிஸ்

களுத்துறை, வாடியமங்கடை சந்திக்கு அருகில் கடந்த பெப்ரவரி 14 ஆம் திகதி நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் தேடப் பட்டுவரும் சந்தேக நபர்களைக் கைது செய்ய போலிஸ் பொதுமக்களின் உத வியைக் கோரியுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த இனந்தெரியாத இருவரால் இந்த துப் பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் களுத் துறை வடக்கு பொலிஸ் மற்றும் களுத் துறை பிரிவு குற்ற விசாரணை பணிய கம் இணைந்து விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றன.

இதுவரை நடத்தப்பட்ட விசாரணைக ளின் அடிப்படையில், 27 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் குறித்த தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸ் தெரிவித் துள்ளது.

இந்தநிலையில் படங்களில் காணப் படும் சந்தேகநபர்கள் குறித்து ஏதே னும் தகவல் தெரிந்தால் பின்வரும் எண்களைத் தொடர்பு கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகி றார்கள்:

பொறுப்பதிகாரி – களுத்துறை வடக்கு பொலிஸ் நிலையம்: 071 – 8591692

களுத்துறை பிரிவு குற்ற விசாரணை பணியகம்: 071 – 8596395

# தேங்கிக் கிடக்கும் இலக்கத் தகடுகள்: உரிமையாளர்களுக்கு அவசர அழைப்பு

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் அச்சி டப்பட்ட சுமார் ஒரு லட்சத்திற்கும் அதிகமான வாகன இலக்கத் தகடுகளை அவற்றின் உரிமையாளர்கள் பொறுப்பேற்க வராததால், திணைக்களத்தின் களஞ்சியசாலைகள் நிரம்பி வழியும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் அச் சிடப்பட்ட ஒரு லட்சத்திற்கும் அதிகமான இலக்கத் தகடு கள் கொழும்பு தலைமை அலுவலகத்தில் தேங்கிக் கிடக் கின்றன.

இந்த பாரிய அளவிலான தகடுகள் அடுக்கப்பட்டிருப்பதால், திணைக்களப் பணியாளர்கள் தமது அன்றாட பணிகளை முன்னெடுப்பதில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக் குகின்றனர்.

அதேவேளை ஏனைய மாகாணங்களுக்கு சுமார் 1,46,712 இலக்கத் தகடுகள் அச்சிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கமல்




அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இத்தகைய பின்னணியில் வாடிக்கையாளர்கள் உடனடியா கத் தமக்குரிய இலக்கத் தகடுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

# 24 நிறுவனங்கள், செயலிகளை தடைசெய்யப்பட்ட பிரமிட் திட்டங்களாக அறிவித்துள்ள மத்திய வங்கி




இலங்கையில் பல நிறுவனங்கள் மற்றும் செயலிகள் தடைசெய்யப்பட்ட பிரமிட் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை கண்டறியப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

திருத்தப்பட்ட 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித் தொழிலியல் சட்டத்தின் 83சி பிரிவின் கீழ், இந்த நிறுவனங்கள் மற்றும் செயலிகள் சட்டவிரோதமானவை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்படி I.C.A.N Advertising (Pvt) Ltd மற்றும் அதன் இணையத்தளங்களான icanonlineadvertising.com, bannercuts.com, bannercuts.lk, bannercuts.net, bannercuts.org ஆகியவை இத்தகைய தடைசெய்யப்பட்ட திட்டங்களை நடத்தியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவற்றுடன் மேலதிகமாக, Tiens Lanka Health Care (Pvt) Ltd, Best Life International (Pvt) Ltd, Mark – Wo International (Pvt) Ltd, V M L International (Pvt) Ltd, Global Lifestyle Lanka (Pvt) Ltd, Fast3Cycle International (Pvt) Ltd, Sport Chain app, Sport Chain zs society Sri Lanka, OnmaxDT, MTFE App மற்றும் அதன் குழுமங்கள், Fastwin (Pvt) Ltd, Fruugo Oline App, Ride to Three Freedom (Pvt) Ltd, Qnet / Questnet, Era Miracle (Pvt) Ltd kw;Wk; Genesis Business School, Ledger Block, Isimaga International (Pvt) Ltd, Beecoin App மற்றும் Sunbird Foundation, Windex Trading, The Enrich Life (Pvt) Ltd, Smart Win Entrepreneur (Pvt) Ltd, Net Fore International (Pvt) Ltd / Netrrix, Pro Care (Pvt) Ltd, Shade of Procare (Pvt) Ltd kw;Wk; SGO (sgomine.com) ஆகியவையும் தடைசெய்யப்பட்ட திட்டங்களின் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கை சட்டத்தின் கீழ் இத்தகைய பிரமிட் திட்டங்கள் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளமையை மீண்டும் வலியுறுத்தியுள்ள மத்திய வங்கி, பொதுமக்கள் இவ்வாறான நிறுவனங்களுடன் எவ்வித கொடுக்கல் வாங்கல்களிலும் ஈடுபட வேண்டாம் என்றும் இது குறித்து மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளது.

# அஸ்வெசும கொடுப்பனவு நாள்களில் மதுபானங்களின் விற்பனை அதிகரிப்பு

மலையகத்தின் பல பகுதிகளில் அஸ்வெசும கொடுப்பனவு வழங்கப்படும் நாள்களில், ஏனைய நாள்களை விட மதுபான விற்பனை கணிசமாக அதிகரிப்பதாக மதுபானசாலை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கிராமபுறம் மற்றும் நகர்ப்புறம் ஆகிய இரு பகுதிகளிலும் உள்ள மதுபானசாலைகளில் இப்போக்கு காணப்படுவதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அஸ்வெசும கொடுப்பனவைப் பெறும் பலர், தமது குடும்பப் பொறுப்புகள் குறித்து கவலைப்படாமல் அந்த பணத்தை மதுபானத்திற்காக செலவிடுகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும பயனாளிகள் தமது வாடிக்கையாளர்கள் என்பதால் இது குறித்து முறைப்பாடு செய்ய முடியாது எனவும், வியாபாரத்தைப் பொறுத்த வரை வருமானம் எங்கிருந்து வருகிறது என்பது தமக்கு முக்கியமில்லை எனவும் மதுபானசாலை உரிமையாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.









# அம்பாறையில் 110 குடும்பங்களுக்கு வீடமைப்பு நிதி உதவி

(ஜலீல் ஜீ)

குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் நோக்கில் நடைமுறைப் படுத்தப்படும் "தமக்கென ஓர் இடம் – அழகான வாழ்க்கை" என்ற தேசிய வீடமைப்பு உதவி திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த 110 குடும்பங்களுக்கு வீடு கட்டுவதற்கான நிதி உதவிக் காசோலைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்று அம்பாறை பிரதேச செயலாளர் அலுவலகக் கேட்போர் கூடத்தில் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவர் மற்றும் கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதியமைச்சர் வசந்த பியதிஸ்ஸ தலைமையில் நடைபெற்றது.

நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டத்தின் மூலம் அம்பாறை மாவட்டத்தில் மொத்தமாக 430 குடும்பங்களுக்கு வீடமைப்பு உதவி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக ரூபா 430 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் முதல் கட்டமாக 110 குடும்பங்களுக்கு காசோலைகள் வழங்கப்பட்டன.

வீடமைப்பு மற்றும் நீர்வழங்கல் அமைச்சும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையும் இணைந்து இந்தத் திட்டத்தை செயல்படுத்தி வருகின்றன. நிகழ்ச்சி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பிராந்திய முகாமையாளர் ருவான் கம்ஹேவாவின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சட்டத்தரணி பிரியந்த விஜேரத்ன, மஞ்சுள சுகத் ரத்நாயக்க, ஏ. ஆதம்பாவா, அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம, அம்பாறை பிரதேச செயலாளர் திலின விக்ரமரத்ன, அம்பாறை நகரசபை தலைவர் இந்திக விஜேவிக்ரம, தமண பிரதேச சபைத் தலைவர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். பயனாளிக் குடும்பங்களும் நிகழ்வில் பங்கேற்றன.







# திருக்கோணேஸ்வரத்தை நேற்று தரிசித்த இந்திய சுவாமிகள் குழு



(எஸ்.கீதபொன்கலன்)


அயோத்தி ஸ்ரீபஞ்ச அக்னி அகாதாஷவின் தலைவரான கைலாசானந்த கிரிஜீ மஹாராஜ் நேற்று திருக்கோணேஸ்வரத்திற்கு வருகை தந்து விசேட பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்டார்.

பூஜைகளில் கலந்து கொள்ள முன்னர் போர்த்துகேயர் காலத்தில் நிலத்தில் மறைத்து வைக்கப்பட்டு, 2013ஆம் ஆண்டு எதிர்பாரத நிலையில் கண்டெடுக்கப்பட்டு அன்று முதல் பிரதான வாயிலை நோக்கியபடி பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள நந்தீஸ்வரரை தரிசித்து வணங்கிய பின்னர் சுவாமி தரிசனத்தில் ஈடுபட்டார்.

இந்தியாவில் இருந்து 14 பேர் கொண்ட தமது குழுவினருடன் கடந்த திங்கள்கிழமை இலங்கைக்கு வருகை தந்த கைலாசானந்த மஹாராஜ் இலங்கையின் பஞ்ச ஈஸ்வரங்களை தரிசித்து வருகின்றார். இதன்படி நேற்று அவரும், அவரது குழுவினரும் திருகோணமலைக்கு வருகை வந்து மாதுமையம்பாள் சமேத கோணைநாத பெருமானை தரிசித்தனர்.









# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ஆட்சேபித்து மன்னாரில் நேற்றுக் கையெழுத்துப் போராட்டம்

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் புதிய சட்ட வரைவு மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நேற்றைய தினம் மன்னார் மாவட்டத்தில் கையெழுத்து சேகரிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் பஸ் நிலையத்திற்கு முன்பாக இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மீனவ சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.













# கச்சதீவில் இந்த முறை 3 இறங்கு துறைகள் நாளை மறுதினமும் அடுத்த நாளும் திருவிழா

(ந.லோகதயாளன்)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய உற்சவத்திற்கான பயணத்தின்போது ஏற்படும் நெருக்கடியை தவிர்க்கும் வகையில் அங்கு 3 இறங்குதுறைகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக மாவட்ட அரச அதிபர் த.பிரதீபன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மாவட்ட அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில் –

கச்சதீவில் அமைந்துள்ள புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த திருவிழா 27 ஆம் திகதி மற்றும் 28 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. இதில் தமிழகத்தில் இருந்து 3,996 யாத்திரிகர்களும் இலங்கையில் இருந்து சுமார் 6,000 யாத்திரிகர்களும் பங்குகொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கச்சதீவு யாத்திரிகர்கள் வருகையின் போது நெருக்கடி நிலவாதபோதும் திருவிழா நிறைவுற்று வெளியேறும்போது அனைவரும் ஒரே தடவையில் வெளியேற முற்படுவதனால் அதிக நெருக்கடி ஏற்படுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டது.



இதன் காரணமாக கச்சதீவில் வழமையாக அமைக்கப்படும் இரண்டு தற்காலிக இறங்குதுறைகளுடன் இம்முறை மேலதிகமாகவும் ஓர் இறங்குதுறை அமைக்க ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய மூன்று இறங்குதுறைகள் அமைக்கப்படுவதன் மூலம் கடந்த ஆண்டுகளில் நிலவிய அதிக நெருக்கடி தவிர்க்கப்படும்.

இதேநேரம் கச்சதீவிற்கு பயணிப்பவர்களிற்கு திடீர் சுகயீனம் ஏற்பட்டால் விரைவாக குடாநாட்டிற்கு அழைத்து வருவதற்காக ஓர் விரைவு நோயாளர் காவு படகும் ஒழுங்கமைக்கப்படுகின்றது. – என்றார்.

# குஸ் போதைப் பொருளுடன் கிளிநொச்சியில் உயர்கல்வி மாணவர்கள் இரண்டு பேர் கைது!

(பூ.லின்ரன்)

கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் நேற்றொபுதன் கிழமை காலை இரு சிங்கள மாணவர்கள் குஸ் வகை போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஊழல் தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் அவர்கள் விசேட தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன் போது ஜேர்மன் டெக் கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் உடைமையில் இருந்து குஸ் வகை போதைப்பொருளை கண்டு பிடித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரு மாணவர்களும் தென் இலங்கையில் இருந்து வந்து கல்வி கற்கின்றனர் எனவும், ஒரு மாணவனின் உடைமையில்1 கிராம் குஸ் பேதைப்பொருளும் மற்றைய மாணவரின் உடமையில் 710 மில்லி கிராம் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மாணவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக இன்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட உள்ளனர்.

# சிலாபத்தில் சிறுமி மீது துஷ்பிரயோகம் ஒருவர் கைது; காதலனைத் தேடி வேட்டை

(உடப்பு நிருபர் க.மகாதேவன்)

சிலாபம் பகுதியில் தனது தாய் மற்றும் தந்தையுடன் அடிக்கடி தகராறில் ஈடுபட்டு வந்த சிறுமி ஒருவர், அவரது நடத்தையில் ஏற்பட்ட மாற்றத்திற்கான காரணத்தைக் கண்டறிய சட்ட வைத்திய அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டார். இதன்போது, அவர் ஏற்கனவே இரண்டு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளமை அதிர்ச்சிகரமான முறையில் தெரியவந்துள்ளதாக சிலாபம் பொலிஸின் சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் தெரிவித்துள்ளது.

ஆரச்சிகட்டுவ பிரதேசத்தில் உள்ள அரச பாடசாலையொன்றில் 9ஆம் தரத்தில் கல்வி பயிலும் 14 வயது 7 மாதங்களையுடைய மாணவியே இவ்வாறு பாதிப்புக்குள்ளாகியுள்ளார். சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனையைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட சிறுமி பொலிஸாரிடம் விரிவான வாக்குமூலம் ஒன்றை வழங்கியுள்ளார்.

2024ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி, நாத்தாண்டிய – வலகாப்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த உறவினர் ஒருவர் தனது வீட்டில் வைத்து முதன்முதலில் அத்துமீறலில் ஈடுபட்டார் எனச் சிறுமி மாரவில பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். இச்சம்பவம் குறித்து யாரிடமாவது கூறினால் கொலை செய்து விடுவதாக மிரட்டிய அந்த உறவினர், சிறுமிக்கு 500 ரூபா பணத்தையும் வழங்கியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் 37 வயதுடைய சந்தேகநபர் மாரவில பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் மாரவில நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். இதனைத் தவிர, 2025ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5ஆம் திகதி, நாவலப்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த தனது காதலனுடன் ஒரே நாளில் இரண்டு முறை தான் உடலுறவில் ஈடுபட்டார் எனச் சிறுமி வாக்குமூலம் அளித்துள்ளார். தன்னைத் திருமணம் செய்து கொள்வதாக அவர் உறுதியளித்தமையால், இச்சம்பவம் குறித்து யாருக்கும் தெரிவிக்காமல் மறைத்ததாகச் சிறுமி குறிப்பிட்டுள்ளார்.

சம்பவம் இடம்பெற்ற காலப்பகுதியில் சிறுமியின் தாய் தொழில் நிமித்தம் வெளிநாடு சென்றிருந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தலைமறைவாக உள்ள சந்தேக நபரான காதலனைக் கைது செய்ய சிலாபம் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தற்போது தனது தாயின் பாதுகாப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ள சிறுமி தொடர்பில், நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் மேலதிக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# மொனறாகல – பண்டாரவளை பயணிகள் பஸ் கடத்தப்பட்ட நிலையில் பாலத்தின் மேல் மீட்பு

(பசறை: நடராஜா மலர்வேந்தன்)

மொனராகல முதல் பண்டார வெல வரை சேவையில் ஈடுபடும் இலங்கைப் போக்குவரத்து சபையின் வெல்லவாயா டிப்போவிற்கு சொந்தமான பயணிகள் பஸ் ஒன்று திடீரென காணாமல் போன சம்பவம் பதிவாகியுள்ளது.



நேற்று முன்தினம் பண்டாரவளை பஸ் நிலையத்தில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த அந்த பஸ் நேற்றுக் காலை 06.45 மணிக்கு மொனராகலை நோக்கி சேவையை ஆரம்பிப்பதற்காக சாரதி மற்றும் நடத்துநர் பரிசோதனை செய்ய வந்தபோது அங்கு இல்லை என்பது தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சம்பவம் தொடர்பில் பண்டாரவளை பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டதுடன் உடனடியாக விசாரணைகள் ஆரம்பிக் கப்பட்டன.

பின்னர் மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் விசாரணைகளின் அடிப்படையில் அந்த பஸ் தியத்தலாவ – பண்டாரவளை பிரதான வீதியின் வலிஹெல்கம – வெலிகடகம பகுதியில் உள்ள பாலம் ஒன்றின் மேல் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டதாகத் தெரியவந்தது.

பஸ்ஸை பரிசோதித்தபோது அது பல இடங்களில் விபத்துக்குள்ளாகியுள்ளமையும் உறுதி செய்யப் பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை இலங்கை பொலிஸ் மேற்கொண்டு வருகின்றனர்.



# மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் குரங்குகள் தொல்லையால் பீதியடைந்துள்ள மக்கள்



(மஸ்கெலியா நிருபர்)

நல்லதண்ணி வன ஜீவராசிகள் பிரிவிற்கு உட்பட்ட மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட

மஸ்கெலியா நகர், மொக்கா தோட்டம் ,எடம்ஸ்பீக் தோட்டம், நல்லதண்ணி நகர், லக்சபான தோட்டம்,ரக்காடு கிராம பகுதி, மறே தோட்ட பகுதியில் கடந்த சில மாதங்களாக குரங்குகள் தொல்லை அதிகரித்துள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆயிரக் கணக்கான குரங்குகள் கூட்டம் கூட்டமாக மக்கள் குடியிருப்பு களுக்குல் புகுந்து சமைத்த உணவுகள் மற்றும் வீட்டில் உள்ள உலர் உணவுப் பொருக்கள் போன்றவற்றையும். மட்டுமல்லாமல் உடைகள், பாடசாலை பிள்ளைகளின் சப்பாத்துக்கள் போன்ற வற்றையும் தூக்கி சென்று விடுகின்றன எனவும் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

அவை அங்குள்ள விவசாய நிலங்களில் உள்ள பயிர்களை நாசம் செய்கின்றபடியால் இங்கு மரக்கறிச் செய்கையில் ஈடுபடுபவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இந்த குரங்குகள் இரவு பகலாக இந்தஜ் குடியிருப்பாளர் பகுதியையே வாழ்விடமாக கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவை வீடுகளுக்கு மேல் நடமாடி அட்டகாசம் புரியும் போது கூரைகள் சேதமடைகின்றன எனவும், அவ்வறை விரட்ட முயற்சி செய்யும் போது அவை கடிக்கப் பாய்கின்றன எனவும், இங்குள்ள வளர்ப்பு நாய்களையும் சீண்டிக் காயப்படுத்தி விட்டு செல்கின்றன எனவும், இதன் காரணமாக தினமும் அப்பகுதிகளில் அடிக்கடி களேபரங்கள் ஏற்படுகின்றன எனவும் அந்த மக்கள் தெரிவிக்கின்றனர் .

குழந்தைகள் மற்றும் நோயாளர்கள் வீட்டில் தனியாக விட்டு செல்ல முடியாத நிலையும் தோன்றியுள்ளது. இது சம்பந்தமாக பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது.

மாத்தளை பகுதியில் ஆரம்பிக்க ப் பட்டு உள்ள வானர சரணாலயத்தில் மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து குரங்குகளையும் கொண்டு செல்ல ஆவன செய்ய வேண்டும் என பாதிக்கப்பட்ட இப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.




# கலங்கியது இலங்கை!

## கொழும்பில் வைத்து இரவோடு இரவாக வழி அனுப்பிவைத்தது நியூஸிலாந்து

ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் நேற்று இரவு கொழும்பில் நடைபெற்ற நியூஸிலாந்துக்கு எதிரான போட்டியில் தோல்வியடைந்ததன் மூலம் இலங்கை அணி அரையிறுதிக்கான வாய்ப்பை இழந்தது.

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் 46ஆவது லீக் ஆட்டம் கொழும்பு பிரேமதாஸ மைதானத்தில் நேற்று இரவு நடந்தது.

இதில் இலங்கை – நியூஸிலாந்து அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி பந்துவீச்சைத் தெரிவு செய்தது.

அதன்படி, முதலில்துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 168 ஓட்டங்களைச் சேர்த்தது.

அணித்தலைவர் மிட்செல் சான்ட்னர் 26 பந்துகளில் 47 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார். ரச்சின் ரவீந்திரா 32 ஓட்டங்களையும், மெக்கன்சி 31 ஓட்டங்களையும் சேர்த்தனர்.

இலங்கை சார்பாகப் பந்துவீச்சில் தீட்சன, சமீர ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பின்னர் 169 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர்கள் தடுமாறியமையால் ஆரம்பம் முதல் இறுதிவரை தோல்வியை நோக்கியே ஆடியது.

இலங்கை அணியின் கமிந்து மெண்டிஸ் (31), வெல்லாலகே (29) ஆகியோரே ஓரளவு சிறப்பாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர்.

இறுதியில் இலங்கை அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 107 ஓட்டங்களை மாத்திரமே சேர்த்தது.

இதன்மூலம் 61 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அரையிறுதிக்கான வாய்ப்பைத் தக்கவைத்தது.

நியூஸிலாந்து சார்பாக பந்துவீச்சில் கலக்கிய ரச்சின் ரவீந்திரா 4 விக்கெட்டுகளையும், மேட் ஹென்றி 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக துடுப்பாட்டம் – பந்துவீச்சு என இரண்டிலும் கலக்கிய நியூஸிலாந்தின் ரச்சின் ரவீந்திரா தெரிவானார்.

இந்தப் போட்டியில் தோற்றதன் மூலம் இலங்கை அணி அரையிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தது. இலங்கைக்கு பாகிஸ்தானுடன் ஒரு போட்டி மீதம் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

நடப்பு உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரை நடத்தும் இலங்கை அணியின் வெளியேற்றம் முழு இலங்கை ரசிகர்களைக் கலங்க வைத்துள்ளது.

### ரி-20 உலகக் கிண்ணம்: ‘சுப்பர்-8’

#### குழு 02 - புள்ளிப்பட்டியல்

| அணிகள் | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|
| இங்கிலாந்து | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 1.491 |
| நியூஸிலாந்து | 2 | 1 | 0 | 0 | 1 | 3 | 3.050 |
| பாகிஸ்தான் | 2 | 0 | 1 | 0 | 1 | 1 | -0.461 |
| இலங்கை | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -2.800 |

### ரச்சின் ரவீந்திரா

| ஓட்டங்கள் | பந்துகள் | சிக்ஸர்கள் | பௌண்டரிகள் |
|---|---|---|---|
| 32 | 22 | 01 | 03 |



**விக்கெட்**

| விக்கெட்டுகள் | ஓவர்கள் | வி.கொ.ஓ. |
|---|---|---|
| 04 | 04 | 27 |

# மற்றொரு வீழ்ச்சி




## T-20 உலகக் கிண்ணங்களில் இலங்கையின் பெறுபேறுகள்

| ஆண்டு | முடிவு |
|---|---|
| 2007 | சுப்பர்-8 |
| 2009 | 2ஆம் இடம் |
| 2010 | அரையிறுதி |
| 2012 | 2ஆம் இடம் |
| 2014 | சம்பியன் 🏆 |
| 2016 | சுப்பர்-10 |
| 2021 | சுப்பர்-12 |
| 2022 | சுப்பர்-12 |
| 2024 | முதல் சுற்று |
| 2026 | சுப்பர்-08 |

## ரி-20 உலகக் கிண்ணம் ‘சுப்பர்-8’: இன்றைய போட்டிகள்



| குழு | போட்டி | நாள் / நேரம் | இடம் |
|---|---|---|---|
| குழு-01 | மே.இ.தீ. எதிர் தெ.ஆபிரிக்கா | வியாழன் 26 பெப் 3 பிற்பகல் | அஹமதாபாத் இந்தியா |
| குழு-01 | இந்தியா எதிர் சிம்பாப்வே | வியாழன் 26 பெப் 7 இரவு | சென்னை இந்தியா |

# மூத்த கொம்யூனிஸ் தலைவர் நல்லகண்ணு காலமானார்

முதுபெரும் கொம்யூனிச தலைவர் நல்லகண்ணு காலமானார். அவருக்கு வயது 101. அவருக்கு சிகிச்சை அளித்து வந்த சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை இதனை அறிவித்துள்ளது.

வயது முதிர்வின் காரணமாக கடந்த பல நாள்களாக உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்த இந்திய கொம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணு, சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று மதியம் அவர் காலமானார்.

இது தொடர்பாக மருத்துவமனை தரப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், "நல்லக்கண்ணு அவர்கள் உடல் நலக்குறைவு காரணமாக கடந்த 01.02.2026 அன்று தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார். கடந்த 24 தினங்களாக சிகிச்சையின் போது அவரது உடல் நிலையில் ஏற்றதாழ்வுகள் இருந்து வந்தது.

பல்துறை மருத்துவக்குழு தீவிர சிகிச்சையும், அதிதீவிர கண்காணிப்பையும் தொடந்து வந்தனர்.

நேற்று அதிகாலை முதல் மருந்துகளை ஏற்கும் தன்மை படிப்படியாக குறைந்து, அவரது உடல் நிலை மிகவும் மோசமடைந்தது.

அதிதீவிர சிகிச்சையில் இருந்தபோதும் முக்கிய உடலுறுப்புகள் அனைத்தும் செயல் இழந்ததால் நல்லக்கண்ணு அவர்கள் நேற்று பிற்பகல் 155 மணியளவில் நம்மை விட்டு பிரிந்தார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கும், உறவினர்களுக்கும் ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை



தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

மேலும், அவரது சிகிச்சைக்கு உறுதுணையாக இருந்த அனைத்து மருத்துவக்குழுக்களுக்கும், தமிழக அரசுக்கும் எங்களது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நல்லகண்ணுவுக்கு முழு அரசு மரியாதை

## முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு



"மறக்க முடியாத அந்த மாமனிதரின் வாழ்வே நமக்காக அவர் விட்டுச் சென்றிருக்கும் மகத்தான செய்தி. நல்லகண்ணுவைமுழுஅரசுமரியாதையுடன்செவ்வணக்கம் செலுத்தி வழியனுப்பி வைப்போம்."

– இவ்வாறு தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

"எனக்கு ஒரு கண்ணில் சரிவரப் பார்வை இல்லை என்றாலும், அகத்தில் மற்றொரு கண் இருக்கிறது. அதுதான் நல்லகண்ணு என்று கருணாநிதியின் கண்ணாகப் போற்றப்பட்ட முதுபெரும் தலைவர் நல்லகண்ணு மறைவுற்றார் என்ற செய்தி நம்மையெல்லாம் கடும் துயரத்துக்கு ஆளாக்கியுள்ளது.

நம் சமகாலத்தில் வாழ்ந்த சமரசமற்ற போராளி நாட்டின் விடுதலைக்காக, பாட்டாளி வர்க்கத்தின் நலனுக்காக தம் இனிய வாழ்வின் பெரும்பகுதியை ஈகம் செய்த தியாகப் பெருஞ்சீலர். சிறை, சித்திரவதை, வலிகள் நிறைந்த வாழ்க்கை என்று எத்தனை இடர்கள் வந்தாலும், சுட்டுப் பொசுக்கினாலும் – தோழர்களைத் தூக்கினில் ஏற்றினாலும் விட்டுப்பிரியாது – செங்கொடி வீரம் குறையாது என்று தோழர் ஜீவா முழங்கியதைப் போல கொள்கை உறுதி குலையாமல் குன்றமென நிமிர்ந்து நின்ற பண்புக்குரியவர் தீரமிகு தோழர் நல்லகண்ணு.

கொள்கைக் கனல் அகத்துளே தீயாய் மூண்டு தகிக்க, முகத்திலே புன்னகையுடன் அமைதியாக வலம் வந்த அரசியல் எரிமலை அவர். கருணாநிதியுடன் என்றென்றும் இனிய நட்பைப் பூண்டிருந்தவர். பொடா, எஸ்மா, டெஸ்மா போன்ற அடக்குமுறைச் சட்டங்களுக்கு எதிரான போராட்டக் களங்களில், கருணாநிதியுடன் தோளோடு தோள் நின்று களமாடியவர்.

பொதுவுடைமைக் கருத்தியலும், திராவிட இயக்கக் கருத்தியலும் சமூக மாற்றத்துக்கான இரட்டைக்குழல் துப்பாக்கியாகச் செயல்பட வேண்டிய கோட்பாட்டுத் தோழமைகள் என்பதில் எப்போதுமே உறுதியாக இருந்தவர். கருணாநிதி தமது ஆட்சிக் காலத்தில் நல்லகண்ணுக்கு அம்பேத்கர் விருதை வழங்கிச் சிறப்பித்தார். நமது திராவிட மாடல் அரசின் சார்பில் தோழர் அவர்களுக்குத் தகைசால் தமிழர் விருதை வழங்கும் வாய்ப்பைப் பெற்றது எனது பெரும் பேறு.

எப்போதும் என்மேல் அன்பும் பாசமும் கொண்டவராக இருந்தார். திராவிட மொடல் ஆட்சி அமைந்த பிறகு உருவாக்கிய திட்டங்களை மனப்பூர்வமாக வரவேற்றார். அய்யாவை அவரது ஒவ்வொரு பிறந்தநாளிலும் சந்தித்து வாழ்த்து பெறுவதை நான் வழக்கமாக வைத்திருந்தேன். நல்லகண்ணு வாழ்ந்த காலத்தில் நாம் வாழ்ந்தோம் என்பது நமக்குப் பெருமை. அவர் பெற்ற விருதுகள், பரிசுகள் எவையானாலும், அவற்றோடு தொகை அனைத்தையும் கட்சிக்காகவும், மக்கள் நலனுக்காக அரசிடம் ஒப்படைத்த அப்பழுக்கற்ற தலைவர் அவர்.

மறக்க முடியாத அந்த மாமனிதரின் வாழ்வே நமக்காக அவர் விட்டுச் சென்றிருக்கும் மகத்தான செய்தி. அதுவே நமக்கு வழிகாட்டும் ஒளியாகட்டும். பாட்டாளி மக்களுக்காகவே வாழ்ந்து நிறைந்த பகட்டில்லா நல்லகண்ணு அவர்களின் நினைவும், புகழும் என்றென்றும் காலத்தால் அழியாத கல்வெட்டாக மக்கள் மனதில் நிலைத்திருக்கும்.

தமிழ்நாட்டின் உயரிய விருது பெற்ற நம் தகைசால் தமிழரை, இனிய தோழரை முழு அரசு மரியாதையுடன் செவ்வணக்கம் செலுத்தி வழியனுப்பி வைப்போம்." என்று குறிப்பிட்டுள்ளார்.

## அமெரிக்க - ஈரான் போர் பதற்றம்:

# பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து தீவிரமாக ஆலோசித்து வரும் துருக்கி



ஈரானுக்கும் அமெரிக்காவிற்கும் இடையே போர் மூண்டால் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து துருக்கி தீவிரமாக ஆலோசித்து வருவதாகத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மத்திய கிழக்கில் நிலவும் பதற்றமான சூழலில், சாத்தியமான அனைத்து விளைவுகளையும் துருக்கி ஆய்வு செய்து வருகிறது. குறிப்பாக, தனது குடிமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அனைத்துச் சூழல்களும் பரிசீலிக்கப்படுகின்றன என தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும், ஈரானின் இறையாண்மையை மீறும் வகையிலான எந்தவொரு செயலிலும் துருக்கி ஈடுபடாது என்பது திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேட்டோ அமைப்பில் உறுப்பினராக உள்ள துருக்கி, ஈரானுக்கு எதிரான எந்தவொரு இராணுவத் தலையீட்டையும் எதிர்ப்பதோடு, இப்பகுதியில் அமைதியின்மை ஏற்படுவதை விரும்பவில்லை.

அத்துடன், இரு நாடுகளுடனும் தொடர்பில் இருக்கும் அங்காரா, பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகளை வலியுறுத்தி வருகின்றன என ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

# ஹங்கேரியில் பொதுத் தேர்தல் விக்டர் ஓர்பனின் ஆட்சிக்கு முடிவு

ஹங்கேரியில் ஏப்ரல் 12 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக வெளியான புதிய கருத்துக் கணிப்பில், பிரதமர் விக்டர் ஓர்பனின் ஆளும் கட்சிக்குப் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பீட்டர் மக்யார் தலைமையிலான “திஸ்ஸ” கட்சி, வாக்காளர்களிடையே 55 வீத ஆதரவைப் பெற்று முதலிடத்தில் உள்ளது.

பிரதமர் ஓர்பனின் “ஃபிடெஸ்” கட்சியின் ஆதரவு 35 வீதமாக குறைந்துள்ளது. இரு கட்சிகளுக்கும் இடையிலான இடைவெளி 20 சதவீதமாக அதிகரித்துள்ளது.

கடந்த 16 ஆண்டுகளாக ஆட்சியில் இருக்கும் விக்டர் ஓர்பன், முதன்முறையாகத் தனது பதவிக்கு வலுவான சவாலை எதிர்கொள்கிறார்.

அரசாங்கம் பல்வேறு சலுகைகளை அறிவித்த போதிலும், மூன்று ஆண்டு கால பொருளாதாரத் தேக்க நிலை காரணமாக ஆளும் கட்சியின் செல்வாக்கு சரிந்துள்ளதாகக் கூறப்படுகிறது.



இருப்பினும், தனிப்பட்ட தொகுதிகளில் தங்களுக்குப் பெரும்பான்மை கிடைத்து மீண்டும் ஆட்சியமைப்போம் என விக்டர் ஓர்பன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# பிரேசிலில் கனமழை, நிலச்சரிவு: 20 பேர் மரணம் மீட்புப் பணி தீவிரம்







தென்கிழக்கு பிரேசிலின் மினாஸ் ஜெரைஸ் மாநிலத்தில் பெய்த கனமழையினால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளில் சிக்கி இதுவரை குறைந்தது 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

திங்கட்கிழமை மாலை பெய்த கடும் மழையைத் தொடர்ந்து ஏற்பட்ட இந்த அனர்த்தத்தில், ஜுயிஸ் டி ஃபோரா நகரிலேயே அதிகளவான உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

அங்கு 15 பேர் உயிரிழந்துள்ளனர் என அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

மேலும், உபா நகரில் 6 பேர் உயிரிழந்துள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரவோடு இரவாகப் பல வீடுகளும் கட்டடங்களும் இடிந்து விழுந்ததில், பலர் மண்ணுக்குள் புதையுண்டுள்ளனர் என அஞ்சப்படுகிறது.

காணாமல் போனவர்களை தேடும் பணியில் மீட்புப் பணியாளர்களும் பொது மக்களும் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குப் பிரேசில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அதிக பாதிப்புக்குள்ளான ஜுயிஸ் டி ஃபோரா நகரில் அரசாங்கம் “பேரிடர் நிலையை” பிரகடனப்படுத்தியுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 26.02.2025




இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது. பதட்டமான சூழ்நிலை கவலை அளிக்கும். நீங்கள் சில தடைகளை சந்திப்பீர்கள். அது உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். சிறந்த வளர்ச்சி காண திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் மேலதிகாரியுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். அதிகப் பணிகளால் மகிழ்ச்சி குறையும். உங்கள் பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

குடும்ப பிரச்சினை சிலவற்றின் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். கருத்துள்ள பேச்சு வார்த்தைகள் மூலம் இந்த வேறுபாட்டை சரி செய்யலாம்.

இன்று நிதிக் கட்டுப்பாடு காணப்படும். இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரும். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக செலவுகள் அதிகாரிக்கும்.




இன்று நீங்கள் சௌகரியமாக உணர்வீர்கள். இனிமையான வார்த்தைகள் மூலம் நீங்கள் பலனடைவீர்கள். இதனால் உங்கள் தன்னம்பிக்கை வளரும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க சாத்தியமாகலாம். நீங்கள் உங்கள் மன உறுதியால் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நேர்மையான நம்பிக்கையான உறவு கொண்டிருப்பீர்கள். இன்று மிகுந்த மகிழ்ச்சியும் திருப்தியும் காணப்படும்.

இன்று நிதியில் ஸ்திரத்தன்மை காணப்படும். உங்கள் சொத்து அதிகரிப்பதற்கான வாய்ப்பு உள்ளது. முக்கிய முதலீடுகளில் பங்கு கொள்வதன் மூலம் லாபம் பெறலாம்.

இன்று உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. உங்களின் ஆற்றலை நீங்கள் சிறப்பாக பராமரிப்பீர்கள்.




இன்று உங்கள் மனதில் தெளிவு காணப்படும். இதனால் உங்கள் செயல்களை திறமையாக ஆற்றுவீர்கள். பொருத்தமான செயல்களை செய்து உங்கள் நிலையை மேம்படுத்துவீர்கள். இனிமையான வார்த்தைகள் உங்களுக்கு பல நல்ல பலன்களை அளிக்கும்.

பணியிடத்தில் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு பதவி உயர்வு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் வெளிப்படையாக கருத்துக்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் குடும்ப வளர்ச்சி பற்றிய ஆலோசனை நடத்துவீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். லாபம் தரும் முதலீட்டிற்கான பயனுள்ள திட்டங்களில் பங்கு கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.




இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் அமைதியை உணர்வீர்கள். கூடுதல் பொறுப்புகள் உங்களுக்கு கவலை அளிக்கும். இரவில் தூக்கமின்மை காணப்படும்.

நீங்கள் சிறந்த பலனைக் காண மிகக் கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் பணியில் வெற்றி பெற நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டும். இந்த அனுபவம் திருப்தி அளிக்கும்.

உங்கள் துணையுடன் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்றைய தேவைகளை பூர்த்தி செய்வது கடினமாக காணப்படும்.




இன்று அதிருப்தியான நிலை காணப்படும். அனுசரணையான போக்கு உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். சிறந்த பலன் காண உங்கள் தன்னம்பிக்கையை அதிகரித்துக் கொள்ள வேண்டும். உங்கள் எதிர்காலத்திற்காக நீங்கள் திட்டமிட வேண்டும்.

சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிக்க நீங்கள் முயற்சி எடுக்க வேண்டும். பணியில் கவனமாக இருப்பதன் மூலம் தவறுகள் நேராமல் தவிர்க்கலாம். தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் கவனமாக பணியாற்றவும்.

உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சி நிலவ வேண்டுமெனில் நீங்கள் உங்கள் துணையிடம் சகஜமாகப் பேச வேண்டும்.

பயணத்தின் போது பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. இதனை தவிர்க்க பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். பல வாய்ப்புகள் உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். நேரத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். இன்றைய நாளின் பலன்கள் உங்களுக்கு திருப்தி அளிக்கும்.

நீங்கள் பொறுப்புடனும் சிரத்தையுடனும் பணியாற்றுவீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி அடைவீர்கள். கடினமான பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பேசுவீர்கள். இது உங்கள் துணையை மகிழ்விக்கும். இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சீராக இருக்கும். பணத்தை நீங்கள் பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று உங்களிடம் சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.




இன்றைய நிகழ்வுகள் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக இருக்கும். கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள். உங்கள் செயல்களில் கவனமாக இருக்க வேண்டும். இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்கும். நீங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள். மொத்தத்தில் உங்கள் செயல்திறனில் திருப்தி காணப்படும்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.நிதிநிலைமை உங்களுக்கு சாதகமாகவும் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள போதுமானதாகவும் இருக்கும். உங்களால் சேமிப்பு நிலையை உயர்த்த இயலும்.




இன்று செயல்கள் சீராக நடக்க சாதகமாக இருக்காது. இன்று அதிக பொறுப்புகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். உங்களை மகிழ்ச்சியாக வைத்திருங்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. கூடுதல் பணிகள் காரணமாக திட்டமிட்டபடி பணிகளை செய்வது கடினமாக இருக்கும்.

நீங்கள் உங்கள் துணையுடன் உணர்ச்சிவசப்பட்டு நடந்து கொள்வீர்கள். உறவில் மகிழ்ச்சி நிலவ இத்தகைய போக்கை தவிர்க்க வேண்டும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். உங்களுக்கு கூடுதல் செலவுகள் ஏற்படும். எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படாது. உங்களுக்கு கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 26.02.2025




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. நீங்கள் சமநிலை இழப்பீர்கள். நற்பலன்கள் காண எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். முக்கிய முடிவுகள் இன்று சிறந்த பலன் அளிக்காது.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். பணிகள் சலிப்பூட்டுவதாக இருக்கும். நீங்கள் சிறந்த பணி மாற்றம் விரும்புவீர்கள். அது இன்று சாத்தியமில்லை.

கடுமையான வார்த்தைகள் மற்றும் செயல்கள் உங்கள் துணையின் மனதில் காயத்தை ஏற்படுத்தும். இதனால் உறவின் ஸ்திரத்தன்மை பாதிக்கும்.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரலாம். இது உங்களுக்கு கூடுதல் சுமையாக இருக்கும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. அஜாக்கிரதை மற்றும் கவனமின்மை காரணமாக உங்களுக்கு வளர்ச்சி அளிக்கும் சில மதிப்பு மிக்க வாய்ப்புகளை இழப்பீர்கள்.

பணியிடத்தில் வெற்றிகள் அதிக அளவில் காணப்படாது. இதனால் பணிகள் தேங்கிக் கிடைக்கும். என்றாலும் திட்டமிட்டு பணியாற்றினால் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்கலாம்.

மனதில் உள்ள குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். அற்ப காரணங்களுக்காக உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள்.

இன்று வீணான செலவுகள் காணப்படும். உங்கள் செலவுகளை கட்டுபடுத்த இயலாது. சிக்கனம் கடைபிடிக்க வேண்டும்.




இன்று சிறந்த வாய்ப்புகள் கிடைக்கும். முக்கிய இலக்குகளை அடைய திட்டமிடலாம். நீங்கள் எதிர்பார்த்ததை விட இன்று அதிகம் கிடைக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

பணியிடத்தில் அதிக வாய்ப்புகள் காணப்படும். நீங்கள் பணிகளை திறமையாகவும் விரைவாகவும் ஆற்றுவீர்கள். உங்கள் அணுகுமுறையில் உறுதி காணப்படும்.

நீங்கள் உங்கள் துணையுடன் சிறந்த அமைதியனா தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இன்றைய நாள் இனிமையாக சிறப்பாக இருக்கும்.

உங்களின் சேமிப்பு ஆற்றல் சிறந்த முறையில் அதிகரிக்கும். லாபம் தரும் புதிய முதலீடுகளில் நீங்கள் பங்கு பெறலாம்.

இன்று உங்களிடம் சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்று கடினமான சூழ்நிலைகளை சந்திக்க நேரலாம். நீங்கள் இதில் முழு ஆற்றலையும் செலுத்த வேண்டியிருக்கும். பொழுதுபோக்கிற்கென சிறிது நேரமே ஒதுக்க வேண்டியிருக்கும். நீங்கள் இன்று அமைதியாக இருக்க வேண்டும்.

நீங்கள் கூடுதல் பொறுப்புகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் காணப்படும். இது உங்களுக்கு வருத்தம் அளிக்கும். மேலும் நீங்கள் பணிகளை கவனமாக கையாள வேண்டியிருக்கும்.

உங்கள் துணையுடன் பேசும் போது உங்கள் பேச்சில் கவனம் வேண்டும். உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும் வகையில் கவனமற்ற வார்த்தைகளை நீங்கள் பேச வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.

# கல்விச் சீர்திருத்தத்தை மதிப்பீடு செய்ய சர்வதேச, உள்நாட்டு கல்வியியலாளர்கள்




நடைபெற்று வரும் தேசிய கல்வி மறுசீரமைப்புகளின் கீழ் செயல்படுத்தப்படும் மதிப்பீடு மற்றும் மதிப்பாய்வு செயல்முறைகளின் தற்போதைய நிலை மற்றும் எதிர்கால திசையை ஆய்வு செய்யும் உயர்மட்டக் குழுவிற்கு, சர்வதேச மற்றும் உள்நாட்டு பல்கலைக்கழக கல்வியியலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இந்தக் குழுவின் தலைவராக, இங்கிலாந்தின் லான்காஸ்டர் பல்கலைக்கழகத்தின் மொழியியல் மற்றும் ஆங்கில மொழித் துறை பேராசிரியர் லூக் வில்லியம் ஹார்டிங் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் குழுவின் உறுப்பினர்களாக அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ மாநிலப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத் துறை பேராசிரியர் பிரியன்வதா அபேவிக்ரம, ஜான் கொட்டலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் மொழிகள் துறை பேராசிரியர் பிமலி இந்திரரத்ன, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணிதம் மற்றும் புள்ளிவிவரவியல் துறையைச் சேர்ந்த கலாநிதி எஸ். அறிவழகன், களனி பல்கலைக்கழகத்தின் ஆங்கில மொழி கற்பித்தல் துறையைச் சேர்ந்த கலாநிதி டி. ஏ. புஷ்பராஜா மற்றும் பரீட்சைகள் ஆணையாளர் திருமதி கே.ஏ.எச்.எச்.குருப்பு ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழு, தற்போதுள்ள கல்வி மதிப்பீட்டு நடைமுறைகளில் உள்ள குறைபாடுகள் மற்றும் சவால்களை அடையாளம் கண்டு, தேசிய மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகளை அடிப்படையாகக் கொண்டு பரிந்துரைகளை வழங்க உள்ளது. கல்வி மறுசீரமைப்புகளின் தரம், வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை வலுப்படுத்துவதே இக்குழுவின் பிரதான நோக்கமாகும்.